# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

Follow us:

மலர் : 03, இதழ்: 191 சுபகிருது வருடம், பங்குனி மாதம் 02ஆம் திகதி வியாழக்கிழமை (16.03.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ஷஃபான் - 23, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


## கமெண்ட் கந்தர்...




## தொழிற்சங்க நடவடிக்கை இன்று காலையில் நிறைவு

தொழிற்சங்கங்களால் முன்வைக்கப்பட்டுள்ள வரிக்கொள்கை தொடர்பில் கவனம் செலுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதால் இன்று காலை 8.00 மணியுடன் தொழிற்சங்க நடவடிக்கையை தற்காலிகமாக முடிவுக்கு கொண்டுவர தீர்மானித்துள்ளதாக தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்க ஒன்றியம் அறிவித்துள்ளது.

02 பக்கம்

# போராட்டத்தால் பெரும் ஸ்தம்பிதம்!







படப்பிடிப்பு: லலித் பெரேரா

★அத்தியாவசிய சேவைகள் முடக்கத்தால் மக்கள் பெரும் அவதி

★ பல முக்கிய துறைகளுக்கு இராணுவ பந்தோபஸ்து

நா.தினுஷா

அரசாங்கத்தின் புதிய வரிக்கொள்கை, கடனுக்கான வட்டி வீத அதிகரிப்பு, சம்பளப் பிரச்சினை, மின் கட்டண அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மருத்துவம், கல்வி, துறைமுகம், புகையிரதம், மின்சாரம், தபால் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் நாடுதழுவிய ரீதியில் நேற்று (15) ஒரு நாள் பணிப்பகிஷ்கரிப்பு மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன.

02 பக்கம்

## சஹ்ரான் ஹாஷிமின் துணைவியார் நிபந்தனைப் பிணையில் விடுதலை



பாறுக் ஷிஹான்

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதாகி கடந்த 4 ஆண்டுகளாக வழக்கு விசாரணையை எதிர்கொண்ட சஹ்ரான் ஹாஷிமின் மனைவி பாத்திமா ஹாதியாவை பிணையில் விடுவிக்க கல்முனை மேல் நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

இது குறித்த வழக்கு கல்முனை மேல் நீதிமன்ற நீதிவான் ஜயராம் ட்ரொக்ஸி முன்னிலையில்...

02 பக்கம்

## தேர்தல் நடக்குமா, இல்லையா என்பதே எங்களதும் கேள்வி

### விசனிக்கிறார் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல்



நா.தினுஷா

தேர்தலில் பங்குகொள்வதற்கான வாய்ப்பு மக்களுக்கு வழங்கப்படாவிட்டால் அவர்களின் அடிப்படை உரிமை மீறப்படுகிறது. தேர்தலை உரிய நேரத்தில், குறிப்பிட்ட திகதியில் நடத்துவதென்பது...

02 பக்கம்

## தேர்தலை நடத்துவது அரசின் பொறுப்பு

### மகாநாயக்க தேரர்கள் சுட்டிக்காட்டு

02 பக்கம்

## மது விற்பனையில் வேகமான சரிவு; மதுவரியை குறைக்கக் கோரிக்கை



மது விற்பனையில் வேகமான சரிவு ஏற்பட்டுள்ளதால், 13 மதுபான உற்பத்தி நிறுவனங்கள் கலால்துறை மற்றும் நிதி அமைச்சுக்கு அனுப்பிய கடிதத்தின் அடிப்படையில்...

02 பக்கம்

## உஷ்



ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசி, அரசாங்கத்துடன் இணைய பேச்சுகள் நடப்பதாகத் தகவல். அவருக்கு எதிராக இலஞ்ச, ஊழல் வழக்கொன்று நடப்பதால் அதனை சமாளிக்கும் வகையில் அவர் அரசுடன் இணையக்கூடுமென்று அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசுடன் இணைந்தால் இராஜாங்க அமைச்சுப் பொறுப்பொன்று அவருக்கு வழங்கப்படலாமென சொல்லப்படுகிறது.

## ஏப்ரல் 25ஆம் திகதியும் தேர்தல் நடக்காது!

### பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு




தேர்தல் ஆணைக்குழுவினால் அறிவிக்கப் பட்டுள்ளவாறு ஏப்ரல் 25ஆம் திகதி உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படுவது சாத்தியமில்லையென பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

02 பக்கம்

## மின் கட்டண உயர்விற்கு எதிராக மேன்முறையீடு




மின் கட்டண உயர்வை எதிர்த்து தாக்கல் செய்யப் பட்ட ரிட் மனுவை தள்ளுபடிசெய்ய மேன் முறையீட்டு நீதிமன்றம் அளித்த தீர்ப்பை இரத்து செய்யக் கோரி உயர் நீதிமன்றத்தில் மேன்முறை யீட்டு...

02 பக்கம்

## ஹரக் கட்டா, குடு சலிந்து அழைத்துவரப்பட்டனர்

நாட்டின் முன்னணி போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளான ஹரக் கட்டா என அழைக்கப்படும் நடுன் சிந்தக மற்றும் குடு சலிந்து என்ற சலிந்து மல்ஷித ஆகியோர் இலங்கை அழைத்து வரப்பட்டனர். இவர்கள், மடகஸ்கரில் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.



இருவரும் நேற்று (15) காலை 7.20 மணியளவில்

02 பக்கம்

## கடன் மறுசீரமைப்புக்கு மேலும் 4 நாடுகள் ஒப்புதல்

இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன்களை மறுசீரமைக்க நான்கு நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

சவூதி அரேபியா, பாகிஸ்தான், ஹங்கேரி, குவைத் ஆகிய நாடுகள் இலங்கை சார்பில் சர்வதேச நாணய நிதியத்திற்கு நிதி உத்தரவாதம் வழங்கியுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு நிதி உத்தரவாதம் வழங்கிய இந்தியா, பரிஸ் கிளப் மற்றும் சீனாவுக்கு மீண்டும் ஒருமுறை சப்ரி நன்றி தெரிவித்துள்ளார்.

## கலவர பூமியானது பாகிஸ்தான்

10 பக்கம்

## தேர்தலுக்கு பணம் கோரி திறைசேரிக்கு மீண்டும் கடிதம்

### அரச அச்சகம் அனுப்பியது

தேர்தலுக்கான அச்சு நடவடிக்கைகளுக்காக பணம் வழங்குமாறு கோரி திறைசேரிக்கு மீண்டும் கடிதம் அனுப்பியுள்ளதாக அரச அச்சகம் அறிவித்துள்ளது.

02 பக்கம்

## தொழிற்சங்க...

வரிக்கொள்கை தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளரின் கையொப்பத்துடன் தமக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் தொடர்பில் நேற்று கொழும்பில் இடம்பெற்ற தீர்க்கமான கலந்துரையாடலின் பின்னரே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜயசிங்க தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடல் தொடர்பில் இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பணிப்பகிஷ்கரிப்பு மற்றும் தொழிற்சங்க நடவடிக்கை மற்றும் அதனால் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகள் குறித்து ஜனாதிபதி சார்பில் ஜனாதிபதியின் செயலாளரின் கையொப்பத்துடன் எங்களுக்கு யோசனைகள் உள்ளடங்கிய கடிதமொன்று இன்று (நேற்று) கிடைக்கப்பெற்றிருந்தது. இந்த அநீதி வரிக்கொள்கை தொடர்பில் தொழில் வல்லுநர்கள், பணியாளர்கள் தொடர்ச்சியாக அரசாங்கத்துக்கு அறிவித்து வந்திருந்தனர். ஆனால் எங்களின் கோரிக்கைகளுக்கு எதிர்ப்புகளையும் கவனத்தில் கொள்ள இந்த அரசாங்கம் முன்வரவில்லை. அதன் காரணமாகவே இந்த தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்திருந்தோம். இதனால் ஏற்பட்ட சகல விளைவுகளையும், அசௌரியங்களையும் அரசாங்கமே முழுமையாக பொறுப்பேற்க வேண்டும்.

இந்நிலையிலேயே இந்தக் கடிதம் எங்களுக்கு கிடைத்துள்ளது. அதில் பல்வேறு யோசனைகளும், தீர்வுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் வரிக்கொள்கைத் திருத்தம் தொடர்பில் தொழிற்சங்கங்களால் முன்வைக்கப்பட்ட மாற்று பரிந்துரைகள் தொடர்பில் கவனம் செலுத்தவும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கான சூழலை உருவாக்கவும் அரசாங்கம் எங்களுக்கு இணக்கம் தெரிவித்திருக்கிறது. அதேபோன்று, சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தைகளின் போது, முதலாவது கட்டத்திலேயே நாணய நிதியத்துடன் முன்வைக்கப்பட்டுள்ள வரிக்கொள்கை திருத்தம் தொடர்பில் பேசவும், அது தொடர்பில் கலந்தாலோசிக்கவும் அரசாங்கம் இணக்கம் தெரிவித்திருக்கிறது.

அதேபோன்று, எங்களால் முன்வைக்கப்பட்டிருந்த வரிக்கொள்கைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தொழிற்சங்கங்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளவும் அரசாங்கம் இணக்கம் வெளியிட்டிருக்கிறது. சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடலில் எங்களையும் இணைத்துக்கொள்ள அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளமையானது, எங்களின் தொழிற்சங்க நடவடிக்கைக்கு சிறந்த பலன் கிடைத்துள்ளது. இதனூடாக, அரசாங்கத்தின் நிலைப்பாட்டையும் மாற்றியமைத்துள்ளோம். தொழிற்சங்கம் என்ற அடிப்படையில் இதனை வரவேற்கத்தக்க விடயமாகவே கருதுகிறோம்.

இந்த பிரச்சினைகளுக்கு தொழிற்சங்க ரீதியாக தீர்வு காணவே விரும்புகிறோம். வன்முறைகளுக்கு செல்வது எங்களின் எண்ணமில்லை. அரசாங்கத்தால் எங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த யோசனைகளை சிறந்த வாய்ப்பாக பயன்படுத்திக்கொள்ள தீர்மானித்திருக்கிறோம். அதற்கமைய, எங்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள பணிப்பகிஷ்கரிப்பு மற்றும் தொழிற்சங்க நடவடிக்கையின் தீவிரத் தன்மையை குறைக்க எதிர்பார்க்கிறோம். ஆனால், இந்த போராட்டத்திலிருந்து நாங்கள் நீங்கவில்லை.

இதனூடாக அரசாங்கத்துக்கு ஒரு வாய்ப்பை வழங்கவே இந்தத் தீர்மானத்தை எடுத்திருக்கிறோம். அதேபோன்று, அடுத்த வாரத்தில் ஜனாதிபதியுடன் நேரடி பேச்சுவார்த்தையொன்றுக்கு வாய்ப்பை பெற்றுக்கொடுப்பதாக அரசத் தரப்பு அறிவித்திருக்கிறது. அதுவரையில், எங்களின் தொழிற்சங்க செயற்பாடுகளின் தீவிரத்தன்மை குறைவடையும்.

ஆகவே, வியாழன் காலை 8.00 மணியுடன் தொழிற்சங்க நடவடிக்கையை தற்காலிகமாக முடிவுக்கு கொண்டுவர தீர்மானித்துள்ளோம் என்றார்.

## மது விற்பனையில்...

கலால் வரியை குறைக்க ஆவன செய்யுமாறு நிதி அமைச்சிடம் மதுவரித் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது. அக்கடிதத்தில் கலால் வரியை 2ஆயிரம் ரூபாவால் குறைக்குமாறு கோரப்பட்டுள்ளது. தற்போது மது, பியர் ஆகியவற்றுக்கு 4ஆயிரத்து 500 முதல் 5ஆயிரத்து 500 ரூபா வரை கலால் வரி விதிக்கப்படுகிறது.

தற்போது, மது விற்பனை 40 சதவீதம் குறைந்துள்ளது. மேலும் சில மது உற்பத்தி தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதாக கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மதுபானத்தின் விலை அதிகரிப்பு மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு காரணமாக மது விற்பனை பாரியளவில் குறைந்துள்ளதாக நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இதுகுறித்து கலால் திணைக்கள மதுவரி ஆணையாளர் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளதாவது,

மதுபான உற்பத்தியாளர்கள் போன்று கலால் திணைக்களமும் கலால் வரியை குறைக்க கோரியுள்ளது.

மதுபானத்தின் விலை உயர்வால், பலர் சட்டவிரோத மதுவை நாடியுள்ளனர். இந்த நிலையைக் கட்டுப்படுத்தும் வகையில் மதுவரியை இயன்றவரை குறைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சஹ்ரான் ஹாஷிமின்...

நேற்று விசாரணைக்கு வந்தபோதே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தினத் தொடர் தற்கொலை தாக்குதல்களின் பிரதான தாக்குதல்தாரியான சஹ்ரான் ஹாஷிமின் மனைவிக்கு எதிராக வழக்கு விசாரணைகள் கடந்த 4 ஆண்டுகளாக இடம்பெற்று வந்துள்ளதுடன் குற்ற ஒப்புதல் வாதப்பிரதிவாதங்கள் பிணை விண்ணப்பம் என தொடர்ச்சியாக இடம்பெற்று வந்தன.

இதன்படி வழக்கானது நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்ட வேளை பிரதிவாதியான சஹ்ரானின் மனைவி சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி ரூஸ்தி ஹபீப் தலைமையில் சட்டத்தரணிகளான நிஸ்வான் உவைஸ், அர்சாத் குழுவினர் ஆஜராகியிருந்தனர்.

இந்த விசாரணையின்போது சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் வழக்கினை நெறிப்படுத்திய அரச சட்டவாதி லாபீர் நெறிப்படுத்தலுடன் சஹ்ரானின் மனைவியினால் ஏற்கனவே வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் தொடர்பில் ஆட்சேபனை எழுப்பப்பட்டு பிரதிவாதியின் சட்டத்தரணிகளினால் நீண்ட நேர சமர்ப்பணங்கள் விண்ணப்பங்கள் முன்வைக்கப்பட்டன. மேலும், சஹ்ரானின் மனைவிற்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அது தொடர்பில் எடுக்கப்பட்ட வாக்குமூலங்களும் எவ்வாறு எடுக்கப்பட்டன என்பது தொடர்பில் கேள்விகள் எழுப்பப்பட்டதுடன் வாதப்பிரதிவாதங்களும் இடம்பெற்றன.

தொடர்ந்து பிணைக்கோரிக்கை மற்றும் ஏன் பிணை வழங்கப்பட வேண்டும் என பிரதிவாதி சார்பாக ஆஜரான சட்டத்தரணிகள் மன்றில் விண்ணப்பங்களை சுட்டிக்காட்டி சமர்ப்பித்தனர். இதன்போது, சுமார் 4 வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்ட விடயத்தை விசேட காரணியாக ஏற்றுக்கொண்டும் இதர காரணங்களை முன்வைத்தும் பிணை வழங்கப்பட வேண்டும் என விசேட கோரிக்கையை பிரதிவாதியின் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியதையடுத்து, பிணை கோரிக்கை மன்றில் ஏற்றுக்கொள்ளப்பட்டு கடும் நிபந்தனைகளுடன் பிணை வழங்கப்பட்டது.

இதன்போது, 25ஆயிரம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணை மற்றும் 25 இலட்ச ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளில் செல்ல அனுமதித்த நீதிபதி, பிரதிவாதி வெளிநாடு செல்லவும் பிணையாளர்கள் வெளிநாடு செல்லவும் தடை உத்தரவு பிறப்பித்தார். மேலும் ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை குற்றப் புலனாய்வுப் பிரிவு அலுவலகத்தில் சஹ்ரான் ஹாஷிமின் மனைவி ஆஜராகி கையொப்பமிடல் வேண்டும் என உத்தரவிட்டார்.

சுமார் 4 வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்ட விடயத்தை விசேட காரணியாக ஏற்றுக்கொண்டு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி நீல் இத்தவல சட்டத்தரணி ஹிஜாஸ் இஸ்புல்லா விவகாரத்தில் வழங்கிய தீர்ப்பை மையப்படுத்தி கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஜயராம் ட்ரொக்ஸி பிணை தொடர்பான அறிவிப்பை அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

காலை முதல் மாலை வரை இராணுவ மேஜர் (சஹ்ரான் ஹாஷிமின் மனைவி மற்றும் பிள்ளையை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்தவர்) ஒருவரிடம் சாட்சியங்கள், குறுக்கு விசாரணைகள், வாக்குமூலங்கள் பெறப்பட்டதை தொடர்ந்து மீண்டும் நீதிபதி ஜயராம் ட்ரொக்ஸினால் எதிர்வரும் மே 17, 18ஆம் திகதிக்கு குறித்த வழக்கு மறுதவணை இடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், சஹ்ரான் ஹாஷிமின் மனைவி அப்துல் காதர் பாத்திமா ஹாதியா இவ்வழக்கு விசாரணைக்கு வந்தபோது பலத்த பாதுகாப்புடன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார்.

# நிதி மோசடியில் என்மீது அவதூறு பரப்பாதீர்கள்!

## மாநகர முதல்வர் றகீப் வேண்டுகோள்

(பாறுக் ஷிஹான்)

கல்முனை மாநகர நிதி மோசடி தொடர்பில் என்மீது அவதூறு பரப்பாதீர்கள் என கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபையின் 60ஆவது மாதாந்த பொதுச் சபை அமர்வு மாநகர முதல்வர் றகீப் தலைமையில் சபா மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை(14) மாலை இடம்பெற்றவேளை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கல்முனை மாநகர சபையில் நிதி மோசடி இடம்பெற்றுள்ளது. இதன்படி இவ்விடயத்தில் நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனினும் நிதி மோசடி தொடர்பில் என்மீது அவதூறு பரப்பாதீர்கள்



என்பதை சகல தரப்பினரிடமும் கேட்டுக்கொள்கின்றேன். அத்துடன் இவ்விடயம் பற்றி கிழக்கு மாகாண பிரதம செயலாளர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதன் நிமித்தம் நிர்வாக மட்டத்தில் சுயாதீன விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

குறித்த ஊழியர்களின் சேவைக்காலத்தில் வரியிருப்பாளர்கள் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகளின்போது மேலும் மோசடி, முறைகேடுகள் எவையும் இடம்பெற்றுள்ளனவா என்பது தொடர்பிலும் இவற்றுடன் வேறு எவராவது சம்பந்தப்பட்டிருக்கின்றனரா என்பது குறித்தும் தீவிரமாக ஆராயப்பட்டு வருகின்றன.

குறித்த விடயம் நீதிமன்றம் மற்றும் பொலிஸ் புலனாய்வு விசாரணைகளின் கீழ் இருப்பதனால் மேலதிக தகவல்களை வெளிப்படுத்த முடியாது. இவ்விடயத்தில் எவர் மீதும் கருணை காட்டப்பட மாட்டாது. நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு நிதி மோசடியுடன் எவர் சம்பந்தப்பட்டிருந்தாலும் உரிய தண்டனைகளை பெற்றுக்கொடுப்பதில் நான் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கிறேன் என்றார்.

## ஏப்ரல் 25ஆம்...

அரசாங்கம் நீதிமன்றத் தீர்ப்புகளைக் கூட புறக்கணித்து வருவது வருந்தத்தக்கது என்றார்.

“அரசாங்கம் மக்களின் வாக்குரிமையை பறிக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கவே இல்லை. நீதிமன்ற தீர்ப்புகளைக்கூட அலட்சியம் செய்யும் நிலைக்கு அரசு வந்துவிட்டது. ஜனநாயகத்தின் மூன்று தூண்களான சட்டமன்றம், நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறை ஆகியவற்றின் சமநிலை இப்போது முற்றிலும் சீர்குலைந்துள்ளது” என கூறினார்.

முன்னதாக உள்ளூராட்சித் தேர்தலை தாமதப்படுத்த அரச அதிகாரிகள் சதி செய்து வருவதாகவும், பாராளுமன்ற சிறப்புரிமைகளுக்குப் பின்னால் மறைந்திருக்கும் நீதிமன்றத் தீர்ப்பை சவால் செய்வதன் மூலம் தேர்தலை தாமதப்படுத்த பாராளுமன்றமும் இப்போது செயல்படுவதாக ஹெட்டியாராச்சி கூறினார்.

## தேர்தல் நடக்குமா, ...

சிறந்த ஜனநாயக கொள்கையாகும். ஆனால், தேர்தல் நடக்குமா இல்லையா என்பதே தற்போது எங்களின் பிரச்சினையுமாக இருக்கிறது என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு குறுப்பிட்டார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மகளிர் தின நிகழ்வுக்கு வந்தாலும் தேர்தலை பற்றியே கேட்கிறார்கள். தேர்தல் நடக்குமா இல்லையா என்பதே எங்களின் பிரச்சினையுமாகும். வாக்கு அதிகாரத்தை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் பேசும்போது, வரலாற்றில் பெண்களுக்கு வாக்கை பெற்றுக்கொடுக்கும் விடயத்தில் பிரதான மூன்று அரசியல் கட்சிகள் அதனை எதிர்த்தார்கள். நாட்டின் எதிர்காலம் பற்றி சிந்தித்த, கல்வி அறிவு கொண்ட அவர்கள் ஏன் இதனை எதிர்த்தார்கள் என்ற பிரச்சினை இன்னும் இருந்து வருகிறது.

ஒருசில உள்ளூராட்சி சபைகளின் ஆண் பிரதிநிதிகள் எவ்வாறு செயற்படுகிறார்கள் என்பதை அனைவரும் அவதானித்துக்கொண்டே இருக்கிறோம். இவற்றை அடிப்படையாக கொண்டே, உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெண்களின் பிரதிநிதித்துவம் எந்தளவு முக்கியத்துவம் பெறுகிறது என்பதை சிந்திக்க வேண்டும். பெண், ஆண் என்ற பிரிவினை சிறிய வயது முதல் சமூகத்தில் உருவாக்கப்பட்டு வந்துள்ளது. இவ்வாறான பிரிவினைகளே சமூகத்தை மறு பக்கத்துக்கு கொண்டுசெல்கின்றன.

தேர்தலை உரிய நேரத்தில், குறிப்பிட்ட திகதியில் நடத்துவது என்பது நடைமுறை ஜனநாயகமாகும். வேட்பாளர்கள் எதற்காக வேட்பாளர்களாக களமிறங்குகிறார்கள் என்பதை உணர்ந்தே தேர்தலில் போட்டியிடுவது உண்மையான ஜனநாயகமாகும். ஆனால், இந்த நிலைமை இன்று இல்லை. பாராளுமன்ற உறுப்பினர்களை போன்றே உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் செயற்படுகிறார்கள். பாராளுமன்றத்தின் செயற்பாடுகளும் மாகாண சபைகளினது செயற்பாடுகளும் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன.

பெரும்பான்மையின நிலைப்பாட்டுக்கு இடமளிக்க வேண்டும் என்பதே ஜனநாயகத்தின் அடிப்படைக் கொள்கையாகும். நாட்டில் பெண்கள் பெரும்பான்மை கொண்டவர்களாக இருந்தும், அவர்களின் நிலைப்பாடுகளுக்கு வாய்ப்பு இல்லை என்றால், அதன்போது ஜனநாயகத்தின் அடிப்படை கொள்கை இல்லாமல் செய்யப்படுகின்றது.

அரசியல் சமூகத்தில் பிரஜையொருவர் உண்மையாக சமூக அங்கத்தவராக செயற்படவேண்டும். தேர்தலில் பங்குகொள்வது என்பது அதில் முக்கிய பங்கு வகிக்கிறது. அதற்கு இடமளிக்காவிட்டால் பிரஜையொருவரின் அடிப்படை உரிமை மீறப்படுவதாகவே நாங்கள் கருதுகிறோம். மேலும் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரித்தால் ஊழல்கள் குறைவடையும் என்பதே எங்களின் நிலைப்பாடாகும் என்றார்.

## ஹரக் கட்டா...

இலங்கைக்கு அழைத்து வரப்பட்டதாக விமான நிலைய பேச்சாளர் தெரிவித்தார். மடகஸ்கரில் இருந்து மும்பை ஊடாக இவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் விசேட குழுவொன்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் அவர்களைப் பொறுப்பேற்றது.

## மின் கட்டண...

நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மின்சார நுகர்வோர் சங்கம் மற்றும் சுற்றுச்சூழல் நீதி மையம் ஆகியவை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளன.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, இலங்கை மின்சார சபை மற்றும் ஏனையோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவில், மின் கட்டணத்தை திருத்த அமைச்சர்கள் குழு எடுத்த முடிவு சட்டத்திற்கு எதிரானது என அறிவிக்கக் கோரப்பட்டுள்ளது.

இதன் மூலம் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் அதிகாரங்களை அமைச்சர்கள் குழு குறைத்துள்ளதாக மேன்முறையீட்டு மனுவில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. எனவே, தாங்கள் தாக்கல் செய்த ரிட் மனுவை விசாரணை செய்யாமல் நிராகரித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் எடுத்த முடிவு சட்டத்துக்கு முரணானது, அந்த முடிவை இரத்துச் செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என மனுதாரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தேர்தலை...

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டமை மக்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளதாக மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே திட்டமிட்டபடி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது அரசாங்கத்தின் பொறுப்பு என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவது என்பது சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலின் மூலம் மக்களின் இறையாண்மையை உறுதி செய்வதே நடைமுறையாகும் என இலங்கையின் அரச தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தேரர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் சட்டக் கட்டுப்பாடுகளுக்குள் மக்கள் பேச்சு சுதந்திரம் பெற வேண்டும்.

சட்டத்தின் ஆட்சியை உறுதிசெய்து வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதன் மூலம் மக்கள் மத்தியில் இயல்புநிலையையும் அமைதியையும் மீட்டெடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என தேரர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தி மக்கள் நலக் கொள்கைகளை அமுல்படுத்தவும் மக்களின் உயிரைப் பாதுகாக்கவும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, இந்த இக்கட்டான தருணத்தில் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த அனைத்து தரப்புகளும் தங்கள் கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்ற வேண்டும் என்று தாம் உறுதியாக நம்புவதாக மகாநாயக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

## தேர்தலுக்கு...

திறைசேரியின் நடவடிக்கை பிரிவிற்கு குறித்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அரச அச்சகர் கங்கானி கல்பனி லியனகே தெரிவித்தார்.

அந்த கடிதத்தின் பிரதியை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கும் அனுப்பியுள்ளதாக அவர் கூறினார்.

அச்சு நடவடிக்கைகளுக்கான பணத்தை பெற்றுத்தருமாறுகோரி இதற்கு முன்னர் நிதி அமைச்சுக்கு கடிதம் அனுப்பியபோதிலும், அதற்கு எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என அரச அச்சகர் தெரிவித்தார்.

## போராட்டத்தால்...

இதனால் அத்தியாவசிய சேவைகள் ஸ்தம்பித்திருந்ததுடன் பொது மக்களும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

அரசாங்கத்தரப்பிலிருந்து வரி திருத்தம் தொடர்பில் சாதகமான பதில்கள் எதுவும் கிடைக்காமையின் காரணமாகவே நேற்றைய தினம் சகல துறைகளையும் உள்ளடக்கும் வகையில் மீண்டுமொரு பாரிய பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுக்க நேர்ந்ததாகவும், தொடர்ந்தும் இந்தப் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வொன்றை பெற்றுக்கொடுக்காவிட்டால் அடுத்தகட்ட நடவடிக்கைகள் இதனை விட பாரதூரமாக அமையுமென தொழிற்சங்கங்கள் அறிவித்திருக்கின்றன.

அரசாங்க மருத்துவ அதிகார்கள் சங்கம் உள்ளிட்ட தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்கங்களின் ஒன்றியம், இலங்கை வங்கி ஊழியர் சங்கம், மின்சாரத்துறை சார்ந்த தொழிற்சங்கங்கள், துறைமுக சேவையுடன் தொடர்புடைய தொழிற்சங்கங்கள், அதிபர் மற்றும் ஆசிரியர் தொழிற்சங்கங்கள், தபால் சேவைப்பிரிவு, தனியார்த்துறையினர், மத்திய வங்கியை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கம், புகையிரத தொழிற்சங்கங்கள், நீர்ப்பானச திணைக்களத்தின் தொழிற்சங்கங்கள், சுங்கப் பிரிவைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள், விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட கல்வி சார்ந்த தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட 45 இற்கும் அதிகமான தொழிற்சங்கங்கள் இணைந்து இந்த தொழிற்சங்கங்கள் இந்த பணிப்பகிஷ்கரிப்பு மற்றும் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்திருந்தன.

### வைத்தியசாலைகள் ஸ்தம்பிதம்

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் மற்றும் தாதியர்கள் உள்ளிட்ட ஏனைய பணிப்பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட பணிப்பகிஷ்கரிப்பினால் நாடு முழுவதிலுமுள்ள அரச வைத்தியசாலைகளின் சிகிச்சை செயற்பாடுகள் முடங்கியிருந்தன. இந்த தொழிற்சங்க நடவடிக்கை குறித்து முன் அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தமையினால் சிகிச்சைக்காக வந்திருந்த நோயாளர்களின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சியை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இருந்தபோதும் சிறுவர் வைத்தியசாலை, மகளிர் வைத்தியசாலை, புற்றுநோய் வைத்தியசாலை மற்றும் சிறுநீரக சிகிச்சைப் பிரிவு, முப்படைகளுக்கான வைத்தியசாலை மற்றும் அங்கொட உளநல பாதுகாப்பு வைத்தியசாலை என்பவற்றில் இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படவில்லை என்பதுடன் அவசர சிகிச்சைப் பிரிவும் வழமைபோல் இயங்கியது. சிகிச்சைக்காக வந்த அநேகமான நோயாளர்கள், சிகிச்சையை பெற்றுக்கொள்ளாமல் வீடு திரும்பியிருந்தனர். மேலும், இந்த தொழிற்சங்க நடவடிக்கையினால் ஏனைய மருத்துவமனை கட்டமைப்புகளின் நாளாந்த செயற்பாடுகள் பாரதூரமாக பாதிப்படைந்திருந்தன.

மக்களை அசௌகரியத்துக்குட்படுத்தும் நோக்கில் இதனை செய்யவில்லை என்றும் வேறு வழியின்றியே தொழிற்சங்க நடவடிக்கைக்குச் செல்ல நேர்ந்ததாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மத்திய செயற்குழு உறுப்பினரும் ஊடகக்குழு உறுப்பினருமான வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

### வெறிச்சோடிய பாடசாலைகள்

நாடெங்கிலும் இருக்கும் அரச பாடசாலைகளின் கற்றல் நடவடிக்கைகளும் நேற்று இடம்பெறவில்லை. அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் பணிப் புறக்கணிப்பின் காரணமாக அநேகமான பெற்றோர் மாணவர்களை பாடசாலைக்கு அனுப்பவில்லை. ஒருசில மாணவர்கள் பாடசாலைகளுக்கு சென்று மீண்டும் வீடுகளுக்கே திரும்பிச் சென்றனர். மேல், மத்திய உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் நேற்று நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த மூன்றாந் தவணைப் பரீட்சைகளும் இடம்பெறவில்லை.

எனவே, இந்த நிலைமையை சரியாகப் புரிந்துகொண்டு மேலதிக செயற்பாடுகளுக்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள நேரிடும் என்று தரப்படுத்தப்பட்ட அதிபர்கள் சங்கத்தின் பிரதான செயலாளர் நிமல் முதுன்கொட்டுவ தெரிவித்தார்.

### துறைமுகத்துக்குள் அமைதியின்மை - பாதுகாப்பு பிரிவினர் குவிப்பு

நேற்றும் நேற்று முன்தினமும் சட்டப்படி வேலைசெய்த துறைமுகப் பணியாளர்கள், நேற்று முழுமையான சேவையிலிருந்து நீங்கி வாகன பேரணியாக துறைமுகத்துக்குள் சென்று எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். இந்நிலையில், துறைமுக பாதுகாப்புக்காக கடற்படையினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததால் கடற்படையினருக்கும் பணியாளர்களுக்கும் இடையில் முறுகல்நிலை ஏற்பட்டது. கடற்படையினரையும் மீறி துறைமுகத்துக்குள் சென்ற பணியாளர்கள் தமது எதிர்ப்பை தெரிவித்து கோஷம் எழுப்பியிருந்தனர். இந்தப் பின்னணியில் துறைமுக அதிகாரசபையின் தலைவர் டீ.பேர்னட் உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகள் பணியாளர்களுடன் பேச்சுவார்த்தைக்கு வந்திருந்ததுடன், அவர்கள் பணிகளை ஆரம்பிக்குமாறு பணியாளர்களிடம் கோரியிருந்தபோதிலும் பணியாளர்கள் தமது தொடர்ச்சியான எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். இதனால், துறைமுகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக பாதிப்படைந்ததுடன் அமைதியின்மையும் நிலவியது.

இந்தப் பின்னணியில் துறைமுகத்தின் பாதுகாப்பு நலன்கருதி கடற்படையினருக்கு மேலதிகமாக இராணுவத்தினரும் பொலிஸாரும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

துறைமுகத்துக்குள் இன்று அடக்குமுறை பிரயோகிக்கப்படுகிறது. தொழிற்சங்கங்களின் தலைவர்கள் துறைமுகத்திலிருந்து வெளியேறினால் உள்நுழைய இடமளிக்க வேண்டாம் என்று அறிவித்திருக்கிறார்கள். அதன் காரணமாக துறைமுகத்துக்கு உள்ளேயே இருந்து எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க நேர்ந்துள்ளது. அடக்குமுறையை பிரயோகித்தாலும் நேற்று துறைமுக செயற்பாடுகள் எதனையும் முன்னெடுக்கவில்லை. எங்களின் இந்த தொழிற்சங்க நடவடிக்கையினால் வரியை வட அதிகளவு நட்டம் அரசாங்கத்துக்கு ஏற்படும். ஆனாலும், எங்கள் மீதான அடக்குமுறை பிரயோகத்தில் சேவையை பெற்றுக்கொள்ள அரசாங்கம் முயற்சிப்பதாக ஸ்ரீலங்கா துறைமுக சுதந்திர சேவையாளர் சங்கத்தின் தலைவர் பிரசன்ன களுத்தரகே தெரிவித்தார்.

### புகையிரத நிலையங்களிலும் பாதுகாப்புப் பிரிவினர்

புகையிரத சாரதிகளும் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் 24 மணிநேர பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர். இந்நிலையில், புகையிரத நிலையங்களின் பாதுகாப்புக்காக இராணுவத்தினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள். நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் புகையிரத சேவைகள் தடைப்பட்டிருந்ததால் தூரப் பிரதேசங்களுக்குச் செல்லும் பயணிகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியிருந்தார்கள்.

இருந்தபோதும், சாரதிகள் தவிர்ந்த ஏனைய முகாமைத்துவப் பிரிவினர் நேற்று கடமையில் ஈடுபட்டிருந்தார்கள். அதற்கமைய, நேற்றுக்காலை 21 புகையிரத சேவைகளை வழங்கக்கூடியதாக இருந்ததாக புகையிரத பொது முகாமையாளர் ஏ.டீ.எஸ். குணசிங்க தெரிவித்தார். அதற்கமைய, கொழும்பை அண்மித்த சகல அலுவலக புகையிரதங்களையும் மாலை 4.00 மணிமுதல் 6.00 மணிவரையிலான காலப்பகுதியில் சகல வீதிகளையும் உள்ளடக்கும் வகையில் சேவைக்கு அமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. நேற்று மாலை கரையோரப் பிரதேசங்களில் அளுத்கம, காலி, பெலியத்த வரையிலான புகையிரத சேவையும், சிலாப வீதியில் சிலாபம் வரையிலான இரு புகையிரத சேவையும், அவிசாவளை வீதியில் ஒரு புகையிரத சேவையும் முன்னெடுக்கப்பட்டிருந்ததாகவும் பிரதான வீதிகளில் கண்டி முதல் ரம்புக்கனை வரையிலும், வடக்கு வீதியில் மாவ மற்றும் கனேமுல்ல வரையிலான புகையிரத சேவைகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாகவும் மேலதிக புகையிரத முகமையாளர் வி.எஸ். பொல்வத்தகே தெரிவித்தார். இலங்கை போக்குவரத்து சேவைக்குரிய பஸ்கள் நேற்று கடமையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### மின், நீர், வங்கி, தபால், டெலிகொம் ஊழியர்களும் பணிப்புறக்கணிப்பு

இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் மற்றும் ஊழியர்கள் கடந்த ஏழு நாட்களாக சட்டப்படி வேலையில் ஈடுபட்டிருந்ததுடன், நேற்று சுகயீன விடுமுறையில் சென்றிருந்தனர்.

தபால் சேவையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அத்தியாவசிய சேவையாக அறிவித்திருந்தபோதிலும் தபால் ஊழியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர். இதன் காரணமாக நாடு முழுவதிலுமுள்ள தபால் அலுவலகங்கள் முடப்பட்டிருந்தன. வரி உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வை அரசாங்கம் பெற்றுக்கொடுக்காமல் அச்சுறுத்தி உழைப்பை பெற்றுக்கொள்ள முயற்சித்தால் அதற்கு அச்சம் கொள்ளப்போவதில்லை என்று ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் விந்தக்க பண்டார தெரிவித்தார்.

மத்திய வங்கி பணியாளர்கள் உள்ளிட்ட வங்கி ஊழியர்களும் நேற்றும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தார்கள். மக்கள் வங்கி, இலங்கை வங்கி தலைமையகங்கள் திறந்திருந்தாலும் அநேகமான கிளைகள் நேற்று மூடப்பட்டிருந்தன.

நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்பு சபையின் ஊழியர்களும் பணியிலிருந்து நீங்கி தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஆதரவளித்திருந்தார்கள்.

நாடு முழுவதுமுள்ள கணக்குப் பிரிவுகள், மின் கட்டண அறிக்கை வெளியிட்டு நடவடிக்கைகள் உள்ளிட்ட சகலப் பிரிவுகளின் பணிகளும் நிறுத்தப்பட்டிருந்ததாக நீர் விநியோக தொழிற்சங்கங்களின் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் பொறியியலாளர் உபால ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

டெலிகொம் நிறுவன ஊழியர்கள் நேற்று சுகயீன விடுமுறையில் சென்றிருந்தனர். நாடு முழுவதிலுமுள்ள டெலிகொம் நிறுவன சகல ஊழியர்களும் இந்த தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஆதரவளித்திருந்ததாக ஸ்ரீலங்கா டெலிகொமின் அனைத்து சேவை சங்கங்களினதும் தலைவர் அத்துல பொதேஜூ தெரிவித்தார்.

### விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டாளர்களும் இணைவு

இதேவேளை, விமான போக்குவரத்து கட்டுப்பாட்டாளர்களும் நேற்று மதியம் 12.00 முதல் 2.00 மணிவரையான இரண்டு மணிநேர காலப்பகுதியில் சட்டப்படி வேலையில் ஈடுபட்டிருந்தனர். இந்த தொழிற்சங்க நடவடிக்கையின் காரணமாக இலங்கையிலிருந்து வெளியேறும் மற்றும் நுழையும் விமானங்களுக்கு சிறிது காலதாமதம் ஏற்பட்டிருந்ததாக ஸ்ரீலங்கா விமான போக்குவரத்து கட்டுப்பாட்டாளர்கள் சங்கத்தின் தலைவர் திஸர அமரநந்த தெரிவித்திருந்தார். இருந்தபோதும், இலங்கை வான்பரப்பின் உயரத்தில் பயணிக்கும் விமானங்கள், அவசர தேவைகொண்ட விமானங்கள், மருத்துவ உதவி மற்றும் நோயாளர்களை அழைத்துச் செல்லும் விமானங்களில் இந்த தொழிற்சங்க நடவடிக்கை தாக்கம் செலுத்தியிருக்க வில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

### பல்வேறு பிரதேசங்களில் ஆர்ப்பாட்டம்

காப்புறுதிக் கூட்டுத்தாபன தொழிற்சங்க ஒன்றியம் நேற்று பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்ததுடன் பொரளை பிரதேசத்தில் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தன. இதேவேளை, நுவரெலியா, கேகாலை உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## தினசரி பலாபலன்கள்

**சுபகிருது வருடம் பங்குனி மாதம் 02ஆம் நாள் வியாழக்கிழமை**

**மேஷம்:** நினைத்த காரிய வெற்றி, சுபசெய்தியால் மகிழ்ச்சி, ஆலய தரிசனத்தால் மன அமைதி.

**ரிஷபம்:** எதற்கும் மௌனம் காப்பது நல்லது, அவசர முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம்.

**மிதுனம்:** காதல் நிறைவேறும், பயணங்கள், சுற்றுலாக்கள் அமையும், பெண்களால் லாபம்.

**கடகம்:** கோபதாபங்கள், எரிச்சல், டென்ஷன், வீண் விரயங்கள், மறதி, நஷ்டங்கள் உண்டு.

**சிம்மம்:** ஆன்மீக பயன்கள், தெய்வபக்தி ஏற்படும், நல்ல எண்ணங்கள் தெளிந்த மனதுடன் நடை போடுவீர்கள்.

**கன்னி:** நினைத்த பயணங்கள் அமையும், மனமகிழ்ச்சி, உற்சாகம், மற்றும் தாய்வழி ஆதரவு உண்டு.

**துலாம்:** சமயோசிதமாக புத்தியுடன் செயலாற்றுவீர்கள், சகோதர ஆதரவு உண்டு.

**விருச்சகம்:** பணவரவுக்கான வாய்ப்புண்டு, பேச்சில் நளினம் இருக்கும், கவிஞர் களுக்கு கற்பனை வளம் மிகும்.

**தனுசு:** மனதில் எண்ணற்ற சிந்தனைகள் அதிகரிக்கும், ஞாபக மறதியால் நட்டங்கள் உண்டாகலாம்.

**மகரம்:** வீண் விரயங்கள், டென்ஷன் ஏற்படும், பண விவகாரங்களில் கவனமாக செயல்படுங்கள்.

**கும்பம்:** தொட்டது துலங்கும் நாள், வீட்டுக்காக பொருள் வாங்குவீர்கள், மூத்த சகோதரரால் உதவிகள் உண்டு.

**மீனம்:** பயணங்களால் உடல் அசதி ஏற்படும், குறை நிறைகளைப் பற்றி விவாதிப்பீர்கள்.

**திதி** : நவமி பி.ப.4.39 வரை பின் தசமி

**நட்சத்திரம்** : மூலம் மு.ப.6.24 வரை பின் பூராடம்

**யோகம்** : சித்த யோகம் (சுப காரியம் நன்மை)

**வார சூலை** : தெற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது

**நல்ல நேரம்** : மு.ப.11.17 - 12.17 மணி வரை

**ராகு காலம்** : 1.47 - 3.17 மணி வரை

**எமகண்டம்** : 6.17 - 7.47 மணி வரை

**குளிகை** : 9.17 - 10.47 மணி வரை

**சந்திராஷ்டமம்** : இடப ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தன அதிர்ஷ்டம்** : அசுவினி,மகம்,மூலம் (பிறந்தவர்களுக்கு)

**விசேட தினம்** : --------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# ஞாயிறு தினங்களில் ஆன்மிக கல்வி கற்பதற்கு மாணவர்களுக்கு இடமளிக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

**மன்னார் இந்து மத பீடத்தினரால் ஏற்பாடு**




மன்னார் மாவட்டத்தில் ஞாயிறு அறநெறிப் பாடசாலைகளுக்கு வருகை தரும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டமையால், ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் ஏனைய பிரத்தியேக வகுப்புகளை நிறுத்துமாறு கோரி அடையாள கவனயீர்ப்புப் போராட்டமொன்று நேற்று (15) காலை 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டமானது இந்து மத பீடத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நடந்துள்ளது.

ஞாயிறு அறநெறிப் பாடசாலைகளில் ஆன்மிக கல்வி கற்பிக்கப்படும் நேரத்தில் சில பாடசாலைகளிலும், கல்வி நிலையங்களிலும், வீடுகளிலும் பிரத்தியேக வகுப்புகள் நடப்பதால் அறநெறிப் பாடசாலைகளில் மாணவர்களின் வருகை குறைவடைந்துள்ளது.

இதனைக் கருத்திற் கொண்டு ஏனைய பிரத்தியேகமான கல்வி வகுப்புகளை ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 8 மணிமுதல் 11 மணிவரை நிறுத்தி, ஆன்மிக கல்வியைக் கற்பதில் மாணவர்கள் ஈடுபட இடமளிக்குமாறு கோரி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஞாயிறு தினங்களில் பிரத்தியேக வகுப்புகளை நிறுத்துங்கள், இளைய தலைமுறைக்கு ஆன்மிக கல்வி முக்கியம், அறநெறிப் பாடசாலை நேரத்தில் பிரத்தியேக வகுப்புகள் வேண்டாம், ஆன்மிக கல்வியை ஊக்குவிப்போம் உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

மேலும், ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் கூறுகையில், ஞாயிற்றுக்கிழமைகளில் அறநெறிப் பாடசாலைகளில் இடம்பெறும் ஆன்மிக கல்வியை மாணவர்கள் தொடர்வதில் இடையூறுகள் காணப்படுகின்றன. அதேபோல், கத்தோலிக்க சமய மறைக்கல்வி, இஸ்லாமிய சமய அஹதிய்யா கல்வி, பௌத்த சமய தாம் பாடசாலை மாணவர்களும் மற்றைய பிரத்தியேக வகுப்புகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, மாணவர்களின் ஆன்மிக கல்வி கற்றல் நலனையும் கருத்திற்கொண்டு பிற வகுப்புகளை ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8 மணிமுதல் 11 மணிவரை நடத்துவதை நிறுத்த நடவடிக்கை மேற்கொண்டு ஆன்மிக கல்வி வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கி உதவுமாறு மிகவும் தாழ்மையுடன் வேண்டி நிற்கின்றோம் எனக் கோரியுள்ளனர்.

இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு சென்று, வடமாகாண ஆளுநருக்கு கையளிக்கும் வகையில் தமது கோரிக்கை அடங்கிய மகஜரை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெலிடம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

# இலவச கண்புரை சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள பதிவுசெய்யுமாறு அறிவிப்பு

யாழ். மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ளவேண்டிய தேவையுடைய நோயாளிகளுக்கு யாழ். போதனா வைத்திய சாலையில் நன்கொடையாளர்களின் உதவியுடன் இலவசமாக கண்புரை சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நோயாளர்களைத் தெரிவுசெய்யும் மூன்றாவது கண் பரிசோதனை முகாம் எதிர்வரும் மார்ச் 18ஆம் திகதி காலை 9மணி முதல் அனலைதீவு, அம்பன் பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் மருதங்கேணி பிரதேச வைத்தியசாலை ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது. எனவே, கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ளவேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் மேற்படி கண் பரிசோதனை முகாமில் கலந்துகொண்டு தங்கள் பெயர்களைப் பதிவுசெய்துகொள்ளுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

# மாணவர்களை தாக்கிய குற்றச்சாட்டில் அதிபர், ஆசிரியர் உட்பட அறுவர் கைது

கண்டி தனியார் பாடசாலையொன்றில் மாணவர்களை கொடூரமாகத் தாக்கிய குற்றச்சாட்டின்பேரில் பாடசாலை அதிபர் மற்றும் மூன்று ஆசிரியர்கள் உட்பட 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் 15 வயதுக்கும் 17 வயதுக்கும் இடைப்பட்ட மாணவர்களே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து கண்டி பிரதேச சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (12) இரவு பெண்கள் விடுதிக்குள் இரகசியமாக ஐந்து ஆண் மாணவர்கள் நுழைந்ததாகவும் இதுகுறித்து மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கையின்போதே மாணவர்கள் தாக்கப்பட்டதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, மாணவிகளின் சம்மதத்துடனேயே மாணவர்கள் விடுதிக்குள் நுழைந்ததாக கூறப்படுகிறது. சம்பந்தப்பட்ட மாணவர்கள் தாக்குதலுக்குள்ளானதுடன், அவர்களின் தலைமுடி வெட்டப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், பாடசாலை அதிபர் மற்றும் மூன்று ஆசிரியர்கள், விடுதி காப்பாளர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேக நபர்கள் கண்டி நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் மார்ச் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட மாணவர்கள் மருத்துவப் பரிசோதனைக்காக கண்டி வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

# இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கு சீன அரசிடமிருந்து சீருடைத் துணி



சீன அரசாங்கத்திடமிருந்து இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கு நன்கொடையாகக் கிடைத்த பொலிஸ் சீருடைத் துணிகளை உத்தியோகபூர்வமாக பொலிஸ் திணைக்களத்திற்கு கையளிக்கும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று (15) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த நன்கொடை தொடர்பான ஆவணங்கள், இலங்கைக்கான சீனத் தூதுவர் சி ஷென் ஹொன்னினால் ஜனாதிபதி முன்னிலையில் பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பான அமைச்சர் டிரான் அலஸிடம் கையளிக்கப்பட்டது.

பின்னர் ஜனாதிபதியும் நன்கொடைகளை பார்வையிட்டார்.

இந்நிகழ்வில் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக குடு சலிந்து மனுத் தாக்கல்

கைதுசெய்யப்பட்டு இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட போதைப்பொருள் வியாபாரி 'குடு சலிந்து' எனப்படும் சலிந்து மல்ஷிக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

அவரது உயிருக்கு உத்தரவாதம் அளிக்குமாறு கோரி தாக்கல் செய்துள்ள இந்த மனுவின் நிலைப்பாட்டை எதிர்வரும் 20ஆம் திகதி அறிவிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சலிந்து மல்ஷிகவின் தாயாரால் சமர்ப்பிக்கப்பட்ட ரிட் மனுவை பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ.மரிக்கார் ஆகிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் குழுவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.




அரசின் வரி விதிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆசிரிய தொழிற்சங்கத்தினர் நேற்று (15) பொரளை பிரதான பஸ் தரிப்பிடத்திற்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.(படப்பிடிப்பு – பிரதீப் தம்பரகே)

# மடகஸ்கார் வாகன விபத்தில் இலங்கைப் பிரஜை உயிரிழப்பு




(பேருவளை பீ.எம்.முக்தார்)

மடகஸ்காரில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் பேருவளை சீனன்கோட்டையைச் சேர்ந்த இரத்தினக்கல் வர்த்தகர் ஒருவர் ஸ்தலத்திலே பலியானதுடன், மேலும் இரு வர்த்தகர்கள் காயமுற்றுள்ளனர்.

நேற்று முன்தினம் (14) இலங்கை நேரப்படி 5.30 மணியளவில் இக்கார் விபத்து இடம்பெற்றுள்ளதுடன், முஹம்மத் ரவூப் முஹம்மத் ரிலா என்ற இரத்தினக்கல் வர்த்தகரே மரணமானவராவார்.

இவர் இரு பிள்ளைகளின் தந்தையாவார்.

சீனன்கோட்டையைச் சேர்ந்த முஹம்மத் இப்ராஹிம் முஹம்மத் ஹுஸைன், முஹம்மத் இக்பால் முஹம்மத் இஷ்ரத் ஆகிய இருவருமே காயமுற்று மடகஸ்கார் நாட்டில் வைத்தியசாலையொன்றில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

இரத்தினக்கல் வர்த்தக நடவடிக்கைக்காக வாடகைக் காரில் பயணம் செய்த வேளை மற்றொரு காருடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இரு வாகனங்களுக்கும் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

விபத்தில் மரணமான முஹம்மத் ரிலாவின் ஜனாஸா நேற்று முன்தினம் நள்ளிரவு மடகஸ்காரில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இலங்கையிலிருந்து மடகஸ்காருக்கு வியாபாரம் மேற்கொள்ளச் சென்ற வர்த்தகர்கள் ஜனாஸா நல்லடக்கத்தில் பங்குபற்றினர். விபத்தில் பலியான வர்த்தகர் கடந்த நான்கு வருட காலமாக மடகஸ்காரில் தங்கிநின்று இரத்தினக்கல் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.




பொறுப்புகள், கடமைகளை நிறைவேற்றி, மனநிறைவான சிரேஷ்ட பிரஜைகளுக்கான HNB யின் பல வரப்பிரசாதங்களை கொண்ட கணக்குகளுடன், முதுமையிலும் மனம் போல வாழ்ந்திடுங்கள்...
சேமிப்பு என்றும் எம்முடனேயே.

- சிரேஷ்ட பிரஜைகள் திட்டம்
- சத்கார கணக்கு

HNB
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி
சிரேஷ்ட பிரஜைகள் கணக்கு
0112 462 462
www.hnb.net

[illegible] Hatton National Bank PLC - PQ 82

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, மார்ச் 16ஆம் திகதி, வியாழக்கிழமை

# மக்களைப் பாதிக்காத போராட்டமே தேவை!

முறையற்ற வரிக்கொள்கையை நீக்குதல், அதிகரித்த வாழ்க்கைச் செலவைக் குறைத்தல், மின், நீர்க் கட்டணங்களைக் குறைப்பது உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் நேற்று முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்கப் போராட்டத்தினால் நாட்டின் பல்வேறு சேவைகளும் முடங்கின.

பாடசாலைகளின் கல்வி நடவடிக்கை முற்றாக முடங்கின. ஆசிரியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக பாடசாலைக்கு வந்த மாணவர்களும் மீண்டும் வீடுகளுக்கு திரும்பி சென்றனர். வைத்தியர்களின் பணிப் புறக்கணிப்பால் வைத்தியசாலைகளின் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் வைத்தியசாலைகளின் அவசர சிகிச்சை தவிர்ந்த ஏனைய சேவைகள் பாதிக்கப்பட்டன.

சுகாதாரம், பெருந்தோட்டம், ஆடைத்தொழிற்துறை, துறைமுகம், ஹோட்டல் ஆகியவற்றின் தொழிலாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் உட்பட நடவடிக்கைக் குழுக்கள், ஜனநாயக மற்றும் சமூக உரிமைகள் மீது ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் முன்னெடுக்கும் பொருளாதார தாக்குதல்களுக்கு எதிரான கூட்டுப் போராட்டத்தில் மக்களை நேற்று அணிதிரட்டின என்றாலும் மிகையில்லை.

தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகள் என்ற மற்றொரு கூட்டணியில் இணைந்துள்ள தொழிற்சங்கங்கள் நேற்றைய போராட்டத்தில் பங்கேற்காத போதிலும், அவற்றில் சில, தொழிற்சங்க ஒருங்கிணைப்புக்குழு முன்வைத்த இதே கோரிக்கைகளுடன் மார்ச் 8 அன்று அதன் சொந்தப் போராட்டங்களை நடத்தியிருந்தன.


வேலைநிறுத்தங்கள் மற்றும் எதிர்ப்புகளின் எழுச்சி அலை, ரணில் விக்கிரமசிங்க ஆட்சி மற்றும் முதலாளித்துவ அரசுடன் ஒரு பெரிய மோதலுக்கு வழிவகுக்கும் என்று தெரிந்தும் தொழிற்சங்கங்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டன. வேலைநிறுத்தத்திற்கு எதிரான அரசின் அத்தியாவசிய சேவை உத்தரவுகளை மீறியே இந்த போராட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த நவம்பர் மாத வரவு-செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட புதிய வரி விகிதங்கள், சர்வதேச நாணய நிதியத்தால் கட்டளையிடப்பட்ட கொடூரமான கோரிக்கைகளில் ஒன்றாகும். மறுசீரமைப்பு, தனியார்மயமாக்கல் மற்றும் பல்லாயிரக்கணக்கான அரசதுறை வேலைகளை அழித்தல், ஊதியம் மற்றும் மேலதிக நேர வேலையை வெட்டுதல், மின் கட்டண அதிகரிப்பு மற்றும் பல்வேறு சமூக மானியங்களை நீக்குதலும் இந்த சிக்கன நடவடிக்கைகளில் அடங்கும்.

இதற்கிடையில் 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் பிணையெடுப்புப் பொதிக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை அங்கீகாரமளித்தால், எதிர்வரும் 22ஆம் திகதி இலங்கை முதல் தவணை நிதித்தொகையைப் பெற்றுக் கொள்ளுமென நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். முதல் தவணையாக சுமார் 330 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கை பெற்றுக் கொள்ளும்.எதிர்வரும் 20ஆம் திகதி கூடவுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையில், இலங்கையின் பிணையெடுப்புக்காக கடந்த செப்டெம்பரில் எட்டப்பட்ட பணிக்குழாம் மட்ட உடன்படிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி கிடைக்கும் கால எல்லை நெருங்கி வரும் நிலையில், நடந்துள்ள இந்த வேலைநிறுத்தத்தின்படி, தொழிற்சங்கங்களின் கோரிக்கையை ஏற்று அவர்களுடன் அரசு சமரசம் செய்துகொள்ளுமாயின் அது ஐ.எம்.எவ். நாணய நிதியத்தின் கட்டம் கட்டமான உதவிகள் கிடைப்பதில் தாக்கத்தை செலுத்தக்கூடும். அரசு அறிவித்துள்ள புதிய வரிக்கொள்கை என்பதே சர்வதேச நாணய நிதியத்தைத் திருப்திப்படுத்தவேயன்றி அதற்கு வேறு எந்தக் காரணங்களுக்கும் இல்லை. எனவே, அந்த திருப்தி ரணில் விக்கிரமசிங்க அரசினால் வழங்கப்பட்டுள்ள நிலையில், மீண்டும் அதனை அரசு பரிசீலிக்குமா என்பது கேள்விக்குறியே.

நேற்றைய போராட்டம் தொழிற்சங்கங்களுக்கு வெற்றி என்றாலும் நாட்டின் இப்போதைய நெருக்கடியான நிலையில், இது மக்களுக்குக் கிடைத்த தோல்விகளில் ஒன்று என்று குறிப்பிட விரும்புகிறோம். மருந்துப்பொருட்கள் விலை கூடி அவற்றைப்பெற அல்லாடும் நோயாளர்கள் ஒருபுறம், ஏற்கனவே கொரோனா காலத்தில் பிற்போடப்பட்ட வகுப்புகளால் தடுமாறும் மாணவர்கள் மறுபுறம் என்று சமூகத்தின் முக்கிய துறைகள் பாதிக்கப்படும் நிலைமையை நேற்றைய தொழிற்சங்கப் போராட்டம் எடுத்துக்காட்டியது. தொழிற்சங்கப் போராட்டம் ஜனநாயக நாட்டுக்குத் தேவை. அவை செய்யப்பட வேண்டும். ஆனால், அரசியல் பின்னணி கொண்ட, அதுவும் சாதாரண ஏழை மக்களை துன்புறுத்தும் போராட்டங்கள் அந்த போராட்டங்களின் மீதான மக்களின் நம்பிக்கையை நீர்த்துப்போகச் செய்யும் என்பதையும் வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.



# அறிவியலின் அடுத்த பாய்ச்சல்!

இரா.மகாதேவன்

இன்று கணினியின் பரிணாமம் முடிவில்லா திசையை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. ஆம், செயற்கை நுண்ணறிவை (ஆர்ட்டிஃபிஷியல் இன்டலிஜென்ஸ்) தொடர்ந்து அடுத்தகட்டமாக உறுப்பு நுண்ணறிவுக்கு (ஓர்கனய்ட் இன்டலிஜென்ஸ்) நகர்ந்துள்ளது கணினித்துறை.

ஓர்கனய்ட்கள் என்பது ஸ்டெம் செல்களில் இருந்து பெறப்பட்ட சிறிய சுய ஒழுங்கமைக்கப்பட்ட முப்பரிமாணத்திசு வளர்ப்பு ஆகும். இவை ஒரு முடியின் அகலத்தைவிட குறைவான அளவிலிருந்து 5 மி.மீ. வரை இருக்கும் என கூறப்படுகிறது.

உடலில் பல்வேறு திசுக்கள், உறுப்புகள் உள்ளதைப் போலவே, பல வகையான ஓர்கனய்ட்களும் உள்ளன. இன்றுவரை ஆராய்ச்சியாளர்களால் மூளை, சிறுநீரகம், நுரையீரல், குடல், வயிறு, கல்லீரலை ஒத்த ஓர்கனய்ட்களை உருவாக்க முடிந்துள்ளது. திசுக்களை வளர்ப்பதற்கான இந்த வழி, உறுப்புகள் எவ்வாறு உருவாகின்றன, வளர்கின்றன என்பதைக் குறித்த விரிவான பார்வையை விஞ்ஞானிகளுக்கு அளித்து வருகிறது.

மேலும், மனித வளர்ச்சி, நோய் பற்றிய புதிய நுண்ணறிவுகளை அவர்களுக்கு வழங்குவதோடு, இந்த மினி உறுப்புகளுடன் மருந்துகள் எவ்வாறு தொடர்புகொள்கின்றன என்பதை அறிந்துகொள்ளும் வாய்ப்பை அளிக்கின்றன.

இந்த ஓர்கனய்ட்களில் ஆயிரக்கணக்கான செல்களும் பல மூளை செல் வகைகளும் உள்ளன. ஆரம்பகால வளர்ச்சியின்போது மூளை எவ்வாறு உருவாகிறது என்பதைப் பற்றிய நுண்ணறிவுகளை மூளை ஓர்கனய்ட்கள் கொண்டுவரும் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

இது குறித்து ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக ஆய்வுசெய்யப்பட்டு வந்தாலும், அது விஞ்ஞானிகளுக்குப் புரியாத புதிராகவே உள்ளது. என்றாலும், மூளை எவ்வாறு உருவாகிறது என்பதைப் பற்றி நாம் நிறைய கற்றுக்கொள்ளப் போகிறோம் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

ஓர்கனய்ட்களுடனான சாத்தியங்கள் முடிவற்றவை என்கின்றனர் அறிவியல் அறிஞர்கள். உதாரணமாக, குடல் செல்களை இன்சுலின் உற்பத்தி செய்யும் பீட்டா செல்களாக மாற்றுவதில் அற்புதமான முன்னேற்றங்களை அவர்கள் கண்டுள்ளனர். இது நீரிழிவு நோய்க்கான எளிய சிகிச்சைக்கு வழிவகுக்கும் என கூறப்படுகிறது.

அவுஸ்திரேலியாவின் மெல்பர்னை தளமாகக் கொண்ட கார்டிகல் ஆய்வக ஆராய்ச்சியாளர்கள், ஒரு சிப்பில் வளர்ந்த மூளை செல்கள் பாங் என்ற விடியோ கேமை விரைவில் விளையாடக் கற்றுக்கொள்ள முடியும் என்பதை கடந்த ஆண்டு கண்டுபிடித்துள்ளனர்.

இதையடுத்து, செயற்கை உயிரியல் நுண்ணறிவு என்பதும், அதன்மூலம், மூளை உயிரணுக்களின் நெட்வர்க்குகள் தங்கள் செயல்களின் விளைவுகளைப் பற்றிய மட்டுப்படுத்தப்பட்ட பின்னூட்டங்களுக்கு பதிலளிக்கும் வகையில், ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை நோக்கி தங்கள் செயற்பாட்டை சுயமாக ஒழுங்கமைக்க முடியும் என்பதும் தெரியவந்தது.

சர்வதேச விஞ்ஞானியான பிரட் ககன், இப்போது மூளை ஆர்கனாய்டுகளால் இயக்கப்படும் அடுத்த தலைமுறை உயிரி கணினிகளை (பயோ கம்ப்யூட்டர்) உருவாக்க முடியும் என்பதை முன்மொழிந்துள்ளார். இது சிலிக்கான் கணினிகளை விட சிறப்பாக செயற்படுவதோடு, அதிக ஆற்றல் கொண்டது என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

மினி மூளை என்று பிரபலமாக அறியப்படும் மூளை ஓர்கனய்ட்கள் ஸ்டெம் செல்களில் இருந்து பெட்ரி டிஷ்ஷில் உருவாக்கப்படும் நியூரோன்களின் செயற்கையான சுய ஒருங்கிணைப்பு திரட்டுகள் ஆகும். ஓர்கனய்ட்கள் ஒன்றோடொன்று இணைக்கப்படலாம் என்றும் அவை வெளிப்புற உலகத்தைப் பற்றிய தகவல்களை வழங்கும் செயற்கை உணர்வு உறுப்புகளுடன் கூட இணைக்கப்படலாம் எனவும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அதாவது, ஒருவகையான பார்வையை செயற்படுத்தக்கூடிய விழித்திரை ஓர்கனய்ட்கள் போன்றவை என்கின்றனர் அவர்கள்.

கடந்த ஜூன் 22 முதல் உலகின் மிக சக்தி வாய்ந்த அதிநவீன கணினியாக இருக்கும் ஃபிரான்டியருடன் அவர்கள் தற்போது உருவாக வாய்ப்புள்ளதாகக் கருதப்படும் கற்பனையான பயோ கணினியை ஒப்பிடுகின்றனர்.

ஃபிரான்டியர் ஒரு வினாடிக்கு 1.102 குவாண்டில்லியன் செயலாக்கத் திறனை கொண்டது. (ஒரு குவாண்டில்லியன் 100 கோடி 100 கோடி, அதாவது 1க்குப் பிறகு 18 பூஜ்ஜியங்கள். செக்ஸ்டில்லியன் 1க்குப் பிறகு 21 பூஜ்ஜியங்கள், சென்டில்லியன் 1க்குப் பிறகு 303 பூஜ்ஜியங்கள், சில்லியன் எண்ணமுடியாத அளவிலான பெரிய எண்).

அறிவியல் ஆராய்ச்சி மேம்பாட்டுக்காகப் பயன்படுத்தப்படும் ஃபிரான்டியர் அதிநவீன கணினி 600 மில்லியன் டொலர் மதிப்புடையது என்றும், தற்போதுள்ள மற்ற அதி நவீன கணினிகளைக் காட்டிலும் 10 மடங்கு செயல்வேகம் கொண்டது என்றும் கூறப்படுகிறது.

இந்த கணினி மனித மூளையுடன் ஒப்பிடத்தக்கது என்று கூறப்படும் நிலையில், இது செயற்பட 21 மெகாவாட் ஆற்றல் தேவைப்படுகிறது.

ஆனால், மூளையின் நுகர்வு வெறும் 21 வாட் மட்டும்தான்.

செயற்கை உயிரியல் நுண்ணறிவு கணினிகளை உருவாக்குவதில் தொழில்நுட்பங்கள் கைகூடி வந்தாலும், நெறிமுறை கவலைகள் ஒருபுறம் எழுந்துள்ளது. குறிப்பாக, ஓர்கனய்ட்கள் நனவில் சில அம்சங்களை பெறலாம் என்றும், மேலும், வலி, துன்பத்தை அனுபவிக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

ஓர்கனய்ட்கள் நனவின் சில அம்சங்களைப் பெறலாம் என்ற கவலை ஒருபுறம் உள்ள நிலையில், நனவு என்பது மூளையால் மட்டும் உருவாக்கப்படுவதில்லை என்றும் மாறாக மூளைக்கும் உடலுக்கும் இடையிலான ஒரு சிக்கலான தொடர்புகள் மூலம் உருவாக்கப்படுவதாகவும் இதனால், ஒரு ஓர்கனய்ட், செயற்கை உணர்வு உறுப்புகளுடன் இணைக்கப்பட்டிருந்தாலும்கூட அது நனவான அனுபவங்கள் அல்லது உடல்வலியை உணரமுடியாது என்ற கருத்தும் நிலவுகிறது.

எப்படியோ, ஓர்கனய்ட் சிப்களால் உருவான கணினி பாங் கேமை கற்றுக்கொண்டு விளையாடி இருப்பதாக கூறப்படும் நிலையில், ஓர்கனய்ட் நுண்ணறிவால் இயங்கும் கணினிகளின் வரவு வெகுதொலைவில் இல்லை.

(நன்றி: தினமணி)

## தவக்கால சிந்தனை

### என்னோடு இராதவர் எனக்கு எதிராக இருக்கிறார்

*ஒரு நாள் இயேசு பேச்சிழந்த ஒருவரிடமிருந்து பேயை ஓட்டினார். பேய் வெளியேறவே, பேச்சற்ற அவர் பேசினார். கூட்டத்தினர் வியந்து நின்றனர். அவர்களுள் சிலர், "பேய்களின் தலைவனாகிய பெயல்செபூலைக் கொண்டே இவர் பேய்களை ஓட்டுகிறார்" என்றனர்.*



*வேறு சிலர் அவரை சோதிக்கும் நோக்குடன், வானத்திலிருந்து ஏதேனும் ஓர் அடையாளத்தைக் காட்டுமாறு அவரிடம் கேட்டனர். இயேசு அவர்களுடைய சிந்தனைகளை அறிந்து, அவர்களிடம் கூறியது:''தனக்கு எதிராகத் தானே பிளவுபடும் எந்த அரசும் பாழாய்ப் போகும். அவ்வாறே பிளவுபடும் வீடும் விழுந்துவிடும். சாத்தானும் தனக்கு எதிராகத் தானே பிளவுபட்டுப் போனால் அவனது அரசு எப்படி நிலைத்து நிற்கும்? பெயல்செபூலைக் கொண்டு நான் பேய்களை ஓட்டுகிறேன் என்கிறீர்களே... நான் பெயல்செபூலைக் கொண்டு பேய்களை ஓட்டுகிறேன் என்றால் உங்களைச் சேர்ந்தவர்கள் யாரைக் கொண்டு பேய் ஓட்டுகிறார்கள்? ஆகவே, உங்கள் கூற்று தவறு. நான் கடவுளின் ஆற்றலால் பேய்களை ஓட்டுகிறேன் என்றால் இறையாட்சி உங்களிடம் வந்துள்ளது அல்லவா! வலியவர் ஆயுதம் தாங்கித் தம் அரண்மனையைக் காக்கிறபோது அவருடைய உடைமைகள் பாதுகாப்பாக இருக்கும். அவரைவிட மிகுந்த வலிமையுடையவர் ஒருவர் வந்து அவரை வென்றால் அவர் நம்பியிருந்த எல்லாப் படைக்கலங்களையும் பறித்துக்கொண்டு, கொள்ளைப் பொருளையும் பங்கிடுவார். என்னோடு இராதவர் எனக்கு எதிராக இருக்கிறார். என்னோடு இணைந்து மக்களைக் கூட்டிச் சேர்க்காதவர் அவர்களைச் சிதறடிக்கிறார்'' என்றார்.*



# தூக்கமின்மை தடுப்பூசியின் செயல்திறனைக் குறைக்கும்

**ஆய்வில் தகவல்**

எந்தவொரு தடுப்பூசி செலுத்துவதற்கு முதல் நாள் இரவில் 6 மணிநேரத்திற்குக் குறைவாக உறங்கும் ஆண்களுக்கு, தடுப்பூசியின் செயல்திறன் குறைவதாக ஆய்வு முடிவுகளில் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் சிக்காகோ பல்கலையைச் சேர்ந்த மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் நடத்திய ஆய்வில், கொவிட், காய்ச்சல் அல்லது எந்தவொரு வைரஸ், பாக்டீரியா பாதிப்புக்கு எதிரான தடுப்பூசியாக இருந்தாலும் தூக்கமின்மை செயல்திறனைக் குறைப்பதாக தெரியவந்துள்ளது. மேலும், ஒரு புதுமையான தகவலையும் குறிப்பிட்டுள்ளனர். தடுப்பூசியின் செயல்திறனை பாதிக்கின்ற மோசமான தூக்கத்தின் தாக்கம் ஆண்களுக்கு மட்டுமே அறிவியல் ரீதியாக பொருந்தும் எனவும் கண்டறிந்துள்ளனர்.

பேராசிரியர் டொக்டர் மைக்கேல் இர்வின் கூறுகையில், தூக்கமின்மையை அளவீடாக வைத்து தடுப்பூசியின் செயல்திறன் குறைவதை ஆய்வு கண்டறிந்துள்ளது.

இது புள்ளிவிவரப்படி, குறிப்பாக ஆண்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது. ஆனால், பெண்களுக்கு அல்ல என்றார்.

டொக்டர் ஃபிலிஸ் ஜீ கூறுகையில், பொதுவாக பெண்களுக்கு காய்ச்சல் உட்பட எந்தவொரு தடுப்பூசிக்கும் வலுவான நோய் எதிர்ப்பு சக்தி உள்ளது. ஆதாரம் என்னவென்றால், இந்த வேறுபாடுகள் ஹோர்மோன், மரபணு மற்றும் சுற்றுச்சூழல் வேறுபாடுகளை பிரதிபலிக்கின்றன. அவை ஆயுட்காலம் முழுவதும் மாறக்கூடும்.

எனவே, இந்த வேறுபாடுகள் வயதானவர்களிடையே குறைவாக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கலாம்.

ஆய்வுக் கட்டுரையில், வைரஸ் தொற்று போன்றவற்றுக்கு எதிராக நோய் எதிர்ப்புத் திறனில் பாலின வேறுபாடுகள் இருக்கின்றன. மேலும், உடலில் தானாக நோய் எதிர்ப்பு சக்தியை உற்பத்தி செய்வதில் கோளாறு இருந்தால் பாதிப்பை ஏற்படுத்துமென ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அதேநேரம், பாலினத்தைப் பொருட்படுத்தாமல், தூக்கமின்மை, விமானப் பயணக் களைப்பு, இரவுப் பணி அல்லது உறங்கும், எழும் நேர சுழற்சியில் ஒழுங்கின்மை இருந்தால், தடுப்பூசி போடுவதை தள்ளிப்போட வேண்டுமெனவும் கேட்டுகொண்டனர்.

## இன்றைய நாளில்...

- 1942 – முதலாவது வி-2 ஏவுகணை ஏவப்பட்டது. (ஏவப்பட்ட உடனேயே வெடித்துச் சிதறியது.)
- 1963 – பாலியில் ஆகூங் மலை நெருப்பு கக்கி 11,000 பேர் வரை இறந்தனர்.
- 1966 – ஜெமினி-8 எனப்படும் நாசாவின் 12ஆவது மனிதரைக் கொண்டுசென்ற விண்கலமானது ஏவப்பட்டது.
- 1978 – இத்தாலியின் முன்னாள் பிரதமர் அல்டோ மோரோ கடத்தப்பட்டு, பின்னர் கொல்லப்பட்டார்.
- 1989 – எகிப்தில் 4,400 ஆண்டுகள் பழைமையான மம்மி, கிசாவின் பெரிய பிரமிடு அருகே கண்டுபிடிக்கப்பட்டது.
- 2006 – மனித உரிமைகளுக்கான அமைப்பை உருவாக்குவதற்கு ஐ.நாவின் பொதுச்சபை ஆதரவாக வாக்களித்தது.

## நக்கல் நமசிவாயம்

வைத்தியசாலை வேலைநிறுத்தங்களால அரசியல்வாதிகளுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை பாருங்கோ..! அவங்கள் மருந்தெடுக்க சிங்கப்பூருக்குத்தானே போறவங்கள்..!



# உள்நாட்டில் ஒன்றிணைக்கப்பட்ட மோட்டார்சைக்கிள்கள் ஜனாதிபதி அலுவலகத்தின் பாவனைக்காக கையளிப்பு






கைத்தொழில் அமைச்சால் அறிமுகப் படுத்தப்பட்ட, இலங்கையில் வாகன உற்பத்தி, ஒன்றிணைத்தல் மற்றும் உதிரிப்பாக உற்பத்திக்கான நிலையான செயற்பாட்டு நடைமுறையின் (SOP) பிரகாரம் உற்பத்தியை ஆரம்பித்த செனாரோ (SENARO GN 125) புதிய மோட்டார்சைக்கிள்களை ஜனாதிபதி அலுவலகத்திற்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று (15) முற்பகல் இடம்பெற்றது.

செனாரோ மோட்டார் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ரொஷான வடுகேவினால் வாகன சாவி மற்றும் அது தொடர்பான ஆவணங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

இலங்கை வங்கியின் முழுமையான நிதிப் பங்களிப்புடன் செனாரோ மோட்டார் தனியார் நிறுவனம், 1.5 பில்லியன் ரூபா முதலீட்டில் யக்கல பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய உதிரிப்பாக ஒன்றிணைத்தல் தொழிற்சாலையின் ஊடாக ஆரம்பகட்டத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட உதிரிப்பாகங்கள் மூலம் 35% பெறுமதி கூட்டப்பட்டு இந்த SENARO GN 125 மோட்டார்சைக்கிளை உற்பத்தி செய்கின்றது. இந்த பெறுமதி சேர்த்தலை விரைவில் 50%ஆக உயர்த்துவது அவர்களின் எதிர்பார்ப்பாக இருப்பதோடு, இந்தத் திட்டத்தின் மூலம் 160இற்கும் மேற்பட்ட நேரடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

உள்நாட்டுப் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான சக்தியாக மாறுவதுடன், உள்நாட்டுத் தொழில் முயற்சியாளர்களுக்கு புதிய ஆற்றலை வழங்கி SENARO GN 125 மோட்டார்சைக்கிள், இலங்கை சந்தைக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது,

இலங்கை வங்கியின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி ரொனால்ட் சி. பெரேரா, பொது முகாமையாளர் ரசல் பொன்சேக்கா, பிரதி பொது முகாமையாளர் ரோஹன குமார, செனாரோ மோட்டார் தனியார் நிறுவனத்தின் பணிப்பாளர் மொஹான் சோமச்சந்திர உள்ளிட்ட பலர் இதன்போது கலந்துகொண்டனர்.

# 6.83 பில்லியன் கொரிய வொன் நிதியுதவியுடன் இரத்தினபுரியில் 2 மிதக்கும் சூரிய மின்சக்தி திட்டம்



தென்கொரிய அரசாங்கத்தின் 6.83 பில்லியன் கொரியன்வொன் நிதியுதவி யுடன் ஒரு முன்னோடித் திட்டமாக இரண்டு மிதக்கும் சூரிய மின்சக்தி திட்டத்தை நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தைத் தொடங்குவதற்கும் செயல்படுத்துவதற்கும் கொரிய தொழில்நுட்ப மேம்பாட்டுக்கான நிறுவனம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்துடன் கலந்துரையாடல் பத்திரத்தில் கையெழுத்திடுவதற்கு அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்றுள்ளார்.

2009ஆம் ஆண்டு கொரிய குடியரசுக்கும் இலங்கைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட மானிய உதவிக்கான கட்டமைப்பு உடன்படிக்கையின் கீழ், கொரிய குடியரசின் வர்த்தக, கைத்தொழில் மற்றும் வலுசக்தி அமைச்சர் 6.83 பில்லியன் கொரியன் வொன் நிதியை குறித்த மிதக்கும் சூரிய மின்சக்தி திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு வழங்க ஒப்புக்கொண்டார்.

குறித்த மிதக்கும் சூரிய மின் உற்பத்தி நிலையங்கள் இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள கிரிப்பன் வெவ நீர்த்தேக்கம் மற்றும் சந்திரிகா வெவ நீர்த்தேக்கங்களின் மேற்பரப்பில் 1 மெகாவோட் திறனுடன் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தென்கொரிய அரசின் சார்பில் இந்தத் திட்டத்தை கொரிய தொழில்நுட்ப மேம்பாட்டுக்கான நிறுவனம் கண்காணிக்க வுள்ளது.

# பலாலி வடக்கில் மீள் குடியேற்றம்; நகாமா - போரூட் நிறுவனங்கள் கள விஜயம்

(மன்னார் நகர் நிருபர்)

யாழ்ப்பாணம் பலாலி பகுதியில் கடந்த மாதம் 03ஆம் திகதி 108 ஏக்கர் காணிகள் மீள் குடியேற்ற வசதிகளை மேற்கொள்வதற்காக விடுவிக்கப்பட்ட நிலையில், தற்காலிக முகாம்களில் வசித்துவரும் குடும்பங்களின் மீள்குடியேற்றத்துக்கான திட்ட முன்னெடுப்புகளை யாழ். மாவட்ட செயலகம் மற்றும் வலிகாமம் வடக்கு பிரதேச செயலகம் முன்னெடுத்து வருகின்றன.

இந்நிலையில், விடுவிக்கப்பட்ட பலாலி பகுதிகளிலுள்ள மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் பார்வையிடும் முகமாகவும் தற்காலிக வீட்டுத் திட்டங்களை வழங்குவதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கும் நகாமா நிறுவனம் மற்றும் நோர்வேயைத் தளமாகக்கொண்டு இயங்கும் போரூட் நிறுவனத்தினர் இணைந்து கள விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

தற்காலிக நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் மக்களின் மீள் குடியேற்றத்தை விரைவுபடுத்தும் முகமாகவும் மீள் குடியேற்ற மக்களின் வாழ்வாதாரம் மற்றும் தொழில்வாய்ப்புகளை உருவாக்கும் முகமாகவும் பிரதேச செயலகத்துடன் இணைந்து அடிப்படை வசதிகள் மற்றும் வாழ்வாதார உதவிகளை மேற்கொள்வதற்கான மேற்பார்வை விஜயமாக குறித்த விஜயம் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.



குறித்த விஜயத்தில் வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் சிவசிறி, நகமா நிறுவனப் பணிப்பாளர் மரிக்கார், நோர்வே போரூட் அமைப்பின் திட்ட அமைப்பாளர் அனா, பலாலி கிரமசேவகர் உட்பட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# நிலையான காலநிலை நிதியுதவி குறித்த உயர்மட்ட ஊடாடும் அமர்வு

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு முன்னெடுப்பு







காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவான் விஜேவர்தன மற்றும் உலகளாவிய பசுமை வளர்ச்சி நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு 'பிணைகளுக்கான வாய்ப்பு மற்றும் இயற்கை மாற்றங்களுக்கான கடன்' என்ற தலைப்பில் கருத்தாய்வு அமர்வொன்றை நடத்தியது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலீடுகளில் ஈடுபட்டுள்ள சம்பந்தப்பட்ட பங்குதாரர் அமைச்சுகளின் தீர்மானம் மேற்கொள்ளும் முக்கிய பிரமுகர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர். சபையின் தலைவர் மற்றும் உலகளாவிய பசுமை வளர்ச்சி நிறுவனத்தின் சபைத் தலைவரான பான் கீ-மூன் உடனான சந்திப்பின் போது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி விடுத்த வேண்டுகோளுக்கிணங்க இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்வு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் கடந்த திங்கட்கிழமை (13) வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரியவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

உலகளாவிய பசுமை வளர்ச்சி நிறுவனம் மற்றும் ஐக்கிய நாடுகளின் ஆசிய மற்றும் பசிபிக் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவின் வள நபர்கள், பசுமை முதலீட்டுச் சேவைகள், ஐக்கிய நாடுகளின் புதுமையான நிதி தொழில்நுட்ப உதவி, இயற்கை இடமாற்றத்திற்கான கடன், கருப்பொருள் பிணைகள் மற்றும் அதன் நன்மைகள் மற்றும் இந்த செயற்பாட்டில் பங்குதாரர் அமைச்சுகளின் வகிபாகம் ஆகிய கருப்பொருட்களை உள்ளடக்கிய கருத்தரங்கை நடத்தினர்.

தீர்மானங்களை மேற்கொள்ளும் முக்கிய பிரமுகர்கள் மத்தியில் இந்த ஊடாடும் அமர்வு இலங்கையில் நிலையான காலநிலை நிதியளிப்புக் கருவிகளை அணுகுதல், அணிதிரட்டுதல் மற்றும் செயற்படுத்துதல் மற்றும் முக்கிய அமைச்சுகளின் அந்தந்த பாத்திரங்கள் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றின் தொடர்புடைய நன்மைகள் மற்றும் அபாயங்கள் குறித்து விழிப்புணர்வை மேம்படுத்தியது.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவான் விஜேவர்தன, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, சுற்றாடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி அனில் ஜாசிங்க, கடற்றொழில் அமைச்சின் செயலாளர் ஆர்.எம்.ஐ.ரத்நாயக்க, நிதியமைச்சு மற்றும் திறைசேரியின் செயலாளர் கே.எம்.மஹிந்த சிறிவர்தன, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே.மாயாதுன்னே, சுற்றுச்சூழல், பருவநிலை மாற்றம் மற்றும் பசுமை நிதி தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர், வனவிலங்கு மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு, நீதி, சிறை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள், மின்சாரம் மற்றும் எரிசக்தி, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு, நிலையான அபிவிருத்தி சபை, இலங்கை மத்திய வங்கி ஆகியவற்றின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் உலகளாவிய பசுமை வளர்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி பிராங்க் ரிஜ்ஸ்பெர்மேன் ஆகியோரும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

# ஸ்கொட்லாந்து பாராளுமன்றத்தைப்போன்று தமிழர்களுக்கும் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும்

## ஸ்கொட்லாந்தில் வலியுறுத்தினார் சாணக்கியன் எம்.பி.





ஸ்கொட்லாந்து பாராளுமன்றம் உள்ளதுபோன்று தமிழ் மக்களுக்கும் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டுமென மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் ஸ்கொட்லாந்தில் வைத்து வலியுறுத்தியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று ஸ்கொட்லாந்திற்கு விஜயம் செய்துள்ளது.

'வெஸ்மினிஸ்டர் பவுண்டேசன் ஒவ் டெமோகிரசி' என்ற அமைப்பின் அனுசரணையில் குறித்த குழுவினர் ஸ்கொட்லாந்திற்கு விஜயம் செய்துள்ளனர்.

நாடாளுமன்ற குழுக்களின் செயற்பாடுகள் தொடர்பில் குறிப்பாக ஸ்கொட்லாந்து நாடாளுமன்றத்தின் செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை நாடாளுமன்றத்திற்கு எவ்வாறான பாடங்களைக் கற்றுகொள்ள முடியும் என்பது குறித்து ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த 2001ஆம் ஆண்டு இலங்கை அரசியல் பிரமுகர்களையும், அரசியலில் ஈடுபாடுள்ள தரப்பினரை சந்தித்த ஸ்கொட்லாந்து பாராளுமன்ற உறுப்பினர் கென்னத் ஜே கிப்சன் (kenneth j Gipson), மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனை தனியாக சந்தித்து பேசியுள்ளார்.

கடந்த 2001ஆம் ஆண்டு இலங்கையில் இருந்தது போன்றதொரு நிலைமையை தமிழ் மக்கள் தற்போது எதிர்கொண்டுள்ளார்கள் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இதன்போது தெரிவித்துள்ளார்.

ஸ்கொட்லாந்து பாராளுமன்றம் உள்ளதுபோன்று தமிழ் மக்களுக்கும் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் ஸ்கொட்லாந்து பாராளுமன்றத்தில் இலங்கை தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேசவுள்ளதாக கென்னத் ஜே கிப்சன் இதன்போது சாணக்கியனிடம் உறுதிமொழி வழங்கியுள்ளார்.

அத்துடன், இலங்கைக்கு விஜயம் செய்யும்போது தமிழ்த் தரப்பினரை சந்தித்துப் பேசவுள்ளதாகவும் அவர் இரா.சாணக்கியனிடம் தெரிவித்துள்ளார்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.03.14
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5059 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,172,453.00
ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 5 1 4 9 8 2

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3301 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 86,901,795.20
ஆங்கில எழுத்து X — வெற்றி இலக்கங்கள் 13 22 30 66

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 1514 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,683,504.80
வெற்றி இலக்கினம் ரிஷபம் — வெற்றி இலக்கங்கள் 5 1 0 4 3 5

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1089 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 80,822,004.00
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 04 14 21 59

**ராசி சுப பலன்** Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 368 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,220,429.20
வெற்றி இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 13 44 49 53 — விசேட இலக்கினம் துலாம்

**மெகா பவர்** — சீட்டிழுப்பு இலக்கம் 1407 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 307,851,694.00
ஆங்கில எழுத்து Y — சுப்பர் இலக்கம் 14 — வெற்றி இலக்கங்கள் 53 58 62 63
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# செலான் வங்கி பீ.எல்.சி.

(2007-07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் குறிப்பு P.Q.9இன் கீழ் பதிவுசெய்யப்பட்டது)

1990ஆம் ஆண்டு 04ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 04ஆம் பிரிவின் கீழ் செலான் வங்கி பீ.எல்.சீ.இன் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானம்.

இத்தால் அறியத்தரப்படுவதாவது 1990ஆம் ஆண்டு 04ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 08ஆம் பிரிவின் கீழ் 2023/01/24ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் செலான் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினரால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளதாவது.

**கிளை : குளியாபிட்டிய**
**கணக்கு இலக்கம் : 0440-32389645-001**

(2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் கம்பனி பதிவு இலக்கம்: P.Q.9இன் கீழ் பதிவு செய்யப்பட்ட) செலான் வங்கி பீ.எல்.சீ.இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு ஈ.எம்.சிறியன்தி டி சேரம் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012 மார்ச் 05ஆம் திகதியிடப்பட்ட 2069ஆம் இலக்க பிணைமுறியின் 2014 ஒகஸ்ட் 21ஆம் திகதியிடப்பட்ட 2651ஆம் இலக்க பிணைமுறி,பிரசித்த நொந்தாரசு ஆர்.வீ.சீ.ராஜகருணா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017 மே 22ஆம் திகதியிப்பட்ட 499ஆம் இலக்க பிணைமுறி பிரசித்த நொந்தரசு கே.சீ.கொடிதுவக்கு என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019 டிசம்பர் 20ஆம் திகதியிடப்பட்ட 396ஆம் இலக்க பிணைமுறி, 2020ஒகஸ்ட் 19ஆம் திகதியிப்பட்ட 469ஆம் இலக்க பிணைமுறி மற்றும் 2020 மார்ச் 06ஆம் திகதியிடப்பட்ட 427ஆம் இலக்க பிணைமுறி ஆகிய பிணைமுறிகளின் கீழ் செலுத்தப்படாமல் நிலுவையாக நிற்கும் தொகையை "கடன் பெற்றவரான 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் முறையாக கூட்டிணைக்கப்பட்டு PV 74686 எனும் பதிவிலக்கத்தைக்கொண்ட ஹிருவல்பொலவில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள மடவல பாம் ஹவுஸ் (பிரைவேட்) லிமிட்டட் நிறுவனத்தினால் மற்றும் "அடகு வைத்தவரான" ஹிருவல்பொலவைச் சேர்ந்த தெஹின்ககே ருக்மன் நிஷாந்த சில்வா என்பவரால் செலுத்தத் தவறியுள்ளமையால் குறித்த பிணை முறியின் மீது பெறப்பட்ட கீழ் குறிப்பிடப்படும் வசதிகளுக்காக 2022 ஏப்ரல் 22ஆம் திகதிவரை அசல் மற்றும் வட்டித் தொகையாக அறுபத்து நான்கு மில்லியன் எண்ணூற்று நாற்பத்தேழாயிரத்து நூற்று இருபத்தைந்து ரூபா நாற்பத்தைந்து சதத் (ரூ.64,847,125.45) தொகையை வட்டியுடன் சேர்த்து செலான் வங்கி பீ.எல்.சீக்கு செலுத்தப்படவேண்டிய நிலுவைத் தொகையாக நிற்பதன் காரணமாக மேற்படி தொகையான அறுபத்து நான்கு மில்லியன் எண்ணூற்று நாற்பத்தேழாயிரத்து நூற்று இருபத்தைந்து ரூபா நாற்பத்தைந்து சதத் (ரூ.64,847,125.45) தொகையை முற்றாக அறவிடும் வரை அத்தொகை மீது 2022 ஏப்ரல் 23ஆம் திகதி தொடக்கம் முழுமையாக அறவிடும் காலப்பகுதி வரை கீழ் குறிப்பிடப்பட்ட வட்டி வீதத்தில் வட்டித்தொகையையும், விளம்பர செலவுகளையும் மற்றும் மேற்படி சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் ஏனைய கட்டணங்களையும் சேர்த்து அறவிடுவதற்காகவும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் (எவையும்) பெறப்பட்டிருப்பின் அவற்றை கழித்து அறவிடுவதற்காக செலான் வங்கி பீ.எல்.சீயிடம் மேற்படி 2069, 2651,499, 396, 469 மற்றும் 427ஆம் இலக்க அடகு முறிகளின் கீழ் அடகு வைக்கப்பட்டதும் இதன் கீழ் அட்டவணைகளில் விவரிக்கப்பட்ட ஆதனங்கள் மற்றும் அதன் வளாகங்கள் உத்தரவு பெற்ற ஏலதாரர் திரு. துசித் கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி பீ.எல்.சீஇன் பணிப்பாளர் சபை 1990ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களைமீது அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) கீழ் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானித்திருக்கின்றது.

அ) சௌபாக்யா கடன் வசதியின் மீது 2022 ஏப்ரல் 22ஆம் திகதியில் ஆறு மில்லியன் இருநூற்று பத்தொன்பதாயிரத்து முந்நூற்று எண்பத்தைந்து ரூபா முப்பத்தைந்து சதத் (ரூ.6,219,385.35) தொகை மற்றும் கொடுப்பனவை முற்றாக செலுத்தும் வரை 2022 ஏப்ரல் 23ஆம் திகதிமுதல் ஆறு மில்லியன் நூற்று முப்பத்தாறாயிரத்து ஐந்நூற்று தொண்ணூற்றிரெண்டு ரூபா எழுபத்திரெண்டு சதத் (ரூ.6.136,592.72) தொகை மீது பத்து வீத (10%) வருடாந்த வட்டியுடன் சேர்த்த தொகை.

ஆ) சௌபாக்யா கடன் வசதியின் மீது 2022 ஏப்ரல் 22ஆம் திகதி எட்டு மில்லியன் அறுநூற்றுநாற்பத்தேழாயிரத்து அறுநூற்று எழுபது ரூபா இருபது சதத் (ரூ.8,647,670.20) தொகை மற்றும் கொடுப்பனவை முற்றாக செலுத்தும் வரை 2022 ஏப்ரல் 23ஆம் திகதிமுதல் எட்டு மில்லியன் ஐந்நூற்று தொண்ணூற்று மூன்றாயிரத்து அறுநூற்று நாற்பத்தாறு ரூபா எண்பத்தேழு சதத் (8,596,646.87) தொகை மீது 6 வீத (6%) வருடாந்த வட்டியுடன் சேர்த்த தொகை..

இ) குறுகிய தவணைக் கடன் வசதியின் மீது 2022 ஏப்ரல் 22ஆம் திகதியில் நாற்பத்தொன்பது மில்லியன் தொள்ளாயிரத்து எண்பதாயிரத்து அறுபத்தொன்பது ரூபா தொன்னூறு சதத் (49,980,069.90) தொகை மற்றும் கொடுப்பனவை முற்றாக செலுத்தும் வரை 2022 ஏப்ரல் 23ஆம் திகதி முதல் நாற்பத்தொன்பது மில்லியன் முந்நூறாயிரம் ரூபா (ரூ.49,300,000.00) தொகை மீது பதினொன்று புள்ளி ஐந்து வீத (11.5%) வருடாந்த வட்டியுடன் சேர்த்த தொகை.

**மேற்குறிப்பிட்ட ஆதன அட்டவணை**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், குளியாபிட்டிய பதிவாளர் பிரிவில் யாகம்பத்து கோறளையின் கட்டுகம்பொல ஹத்பத்துவின் பிங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லையில் 1474-மந்தாகொங்கன கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குள், மதுகசாகர கிராமத்தில் அமைந்திருக்கும் "கெபெல்லகசாகர" என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான எம்.பீ.ஐ.கே.பத்திரன என்பவரால் 2011.09.12ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 851ஆம் இலக்க நிலவரைபடத்தின் லொட் 1 (உத்தரவு பெற்ற நில அளவையாளரான எம்.குணசேகர என்பவரால் 1995.04.18ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 110/95ஆம் இலக்க நிலவரைபடத்தில் பிரித்தொதுக்கப்பட்டகாணித்துண்டின் மீள்வளவையாகும்) என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு மற்றும் அதிலுள்ள கட்டடங்கள், பயிர்கள் உட்பட அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். அதன் எல்லைகளாவன: வடக்கு: காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட காணி அரசாங்க - எல்.டி.ஓ.காணித்துண்டு, கிழக்கு: முன்னர் டி.எல்.ஐ. பெர்னாந்து என்பவரால் உரிமை கோரப்பட்ட தற்போது டி. ருக்மன் நிஷாந்த சில்வா என்பவரால் உரிமை கோரப்படும் காணி, டி.எல்.ஐ.பெர்னாந்து என்பவரால் உரிமை கோரப்படும்.காணி மற்றும் பிரதேச சபை வீதி (உத்தரவு பெற்ற நில அளவையாளர் மற்றும் மட்டப்படுத்துநரான டபிள்யூ.ஜே.எம்.ஜீ.டயஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1979A /94ஆம் இலக்க நிலவரைபடத்தின் லொட் 2) தெற்கு: பிரதேச சபை வீதி மேற்கு: காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட காணி அரசாங்க -எல்.டி.ஓ. காணித்துண்டு ஆகிய எல்லைகளைக்கொண்ட காணியின் பரப்பளவானது பன்னிரெண்டு ஏக்கர் (ஏ.12-றூ.0-பே.0) ஆகும்.

**குறித்த லொட் 1 ஆனது கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியின் மீள் அளவையாகும்.**

வடமேல் . மாகாணம், குருநாகல் மாவட்டம் குளியாபிட்டிய பதிவாளர் பிரிவில் யாகம்பத்து கோறளையின் கட்டுகம்பொல ஹத்பத்துவின் பிங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லையில் 1474-மந்தாகொங்கன கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குள். மதுகசாகர கிராமத்தில் அமைந்திருக்கும்"கெபெல்லகசாகர" என அழைக்கப்படும் காணியானது உத்தரவுபெற்ற நில அளவையாளரான எம்.குணசேகர என்பவரால் 1995.04.18ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 110/95ஆம் இலக்க நில வரைபடத்தில் பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு மற்றும் அதிலுள்ள கட்டடங்கள், பயிர்கள் உட்பட அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். அதன் எல்லைகளாவன: வடக்கு: காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட காணி அரசாங்க -எல்.டி.ஓ.காணித்துண்டு கிழக்கு: காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட காணி அரசாங்க -எல்.டி.ஓ. காணித்துண்டு, டி.எல்.ஐ. பெர்னாந்து என்பவரால் உரிமை கோரப்படும் காணி மற்றும் 1979A/94Mம் இலக்க நில வரைபடத்தின் லொட் 2 தெற்கு: டி.எல்.ஐ.பெர்னாந்து என்பவரால் உரிமை கோரப்படும் காணி, 1979A/94ஆம் இலக்க நில வரைபடத்தின் லொட் 2 மற்றும் பிரதேச சபை வீதி மேற்கு: பிரதேச சபை வீதி மற்றும் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட காணி அரசாங்க -எல்.டி.ஓ. காணித்துண்டு ஆகிய எல்லைகளைக்கொண்ட காணியின் பரப்பளவானது பன்னிரெண்டு ஏக்கர் (ஏ.12-றூ0-பே.0) ஆகும்.

**அத்தோடு இதன் வழியுரித்துடன் சேர்த்து :**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம் குளியாபிட்டிய பதிவாளர் பிரிவில் யாகம்பத்து கோறளையின் கட்டுகம்பொல ஹத்பத்துவின் பிங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லையில் 1474-மந்தாகொங்கன கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குள், மதுகாசாகர கிராமத்தில் அமைந்திருக்கும் "மதுகாசாகர" என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான டபிள்யூ.ஜே.ஏ. டயஸ் என்பவரால் 1994.04.15ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 1979/A எனும் இலக்க நில வரைபடத்தின் லொட் 2 (பாதைக்கான ஒதுக்கீடு) என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு ஆகும். அதன் எல்லைகளாவன: வடகிழக்கு: வீதி தென்கிழக்கு: மேற்குறித்த நில வரைபடத்தின் லொட் 1 தென்மேற்கு:துன்தொட்டவிலிருந்து கொடிகமுவ நோக்கிய கிராம வீதி வடமேற்கு: இந்த காணியின் எஞ்சிய பகுதி ஆகிய எல்லைகளைக்கொண்ட பொதுவான வழியுரித்துடனான காணியின் பரப்பளவானது ஒரு றூட் மற்றும் இருபதுபேர்ச் (ஏ.0-றூ.1-பே.20) ஆகும்.

இந்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு ஈ.எம்.சிரியன்தி டி சேரம் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட2012 மார்ச் 05ஆம் திகதியிடப்பட்ட 2069ஆம் இலக்க பிணைமுறி, 2014 ஒகஸ்ட் 21ஆம் திகதியிடப்பட்ட 2651ஆம் இலக்க பிணைமுறி, பிரசித்த நொத்தாரிசு ஆர்.வீ.சீ. ராஜகருணா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017 மே 22ஆம் திகதியிடப்பட்ட 499ஆம் இலக்க பிணைமுறி, பிரசித்த நொத்தாரிசு கே.சீ.கொடிதுவக்கு என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019 டிசம்பர் 20ஆம் திகதியிடப்பட்ட 396ஆம் இலக்க பிணைமுறி மற்றும் 2020 ஒகஸ்ட்19அம் திகதியிடப்பட்ட 469ஆம் இலக்க பிணைமுறி ஆகிய பிணைமுறிகளின் கீழ் அடகு வைக்கப்பட்டுள்ளது.

**மேற்குறிப்பிட்ட இரண்டாவது ஆதன அட்டவணை**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம் குளியாபிட்டிய பதிவாளர் பிரிவில் இல. 1442 கினியாமகோறளையின் கட்டுகம்பொல ஹத்பத்துவின் பிங்கிரிய பிரதேசசெயலாளர் பிரிவு மற்றும் பிங்கிரிய பிரதேச சபை எல்லையில் கோபாகம கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குள், ஒழுபெலியாவவில் அமைந்திருக்கும் செண்ட்ஹெலன்ஸ் எஸ்டேட் என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான ரீ.கே.தர்மதாச என்பவரால் 2004.03.03ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 3391ஆம் இலக்க நில வரைபடத்தின் லொட் 01 என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு மற்றும் அதிலுள்ள மரங்கள், கட்டடங்கள், பயிர்கள் உட்படஅதில் அமைந்துள்ள யாவும் ஆகும். அதன் எல்லைகளாவன: வடக்கு: பிரதேச சபை வீதி கிழக்கு: ஜோசப் பெர்னாந்து என்பவரின் காணி தெற்கு: ரீ.பீ. கருணாரத்ன என்பவரின் காணி மேற்கு: 3254ஆம் இலக்க நில வரைபடத்தின் லொட் 01 ஆகிய எல்லைகளைக்கொண்ட காணியின் பரப்பளவானது ஒன்பது ஏக்கர் மூன்று றூட் மற்றும் முப்பத்திரெண்டு புள்ளி ஐந்து ஒன்பது பேர்ச் (ஏ.09-றூ.03-பே.32.59) ஆகும்.

**அண்மைய அளவையின் பிரகாரம் :**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம் குளியாபிட்டிய பதிவாளர் பிரிவில் கினியாம கோறளையின் கட்டுகம்பொல ஹத்பத்துவின் பிங்கிரிய பிரதேச செயலாளர் -பிரிவு மற்றும் பிங்கிரிய பிரதேச சபை எல்லையில் இல. 1442 கோபாகம கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குள், ஒழுபெலியாவவில் அமைந்திருக்கும் செண்ட்ஹெலன்ஸ் எஸ்டேட் என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான ஐ."கொட்டம்பகே" என்பவரால் 2004.06.04ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 7553ஆம் இலக்க..நில வரைபடத்தின் லொட் 01 என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு (உத்தரவு பெற்ற நில அளவையாளரான ரீ.கே..தர்மதாச என்பவரால் 2004.03.03ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 3391ஆம் இலக்க நில வரைபடத்தின் லொட்01 என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டின் மீள் அளவையாகும்) மற்றும் அதிலுள்ள மரங்கள், கட்டடங்கள், பயிர்கள் உட்பட அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். அதன் எல்லைகளாவன: வடக்கு:புலுகஸ் சந்தியிலிருந்து அம்பலம்பிட்டிய நோக்கிய பிரதேச சபை வீதி கிழக்கு: ஜோசப் பெர்னாந்து என்பவரின் காணி மற்றும் ரீ.பீ.கருணாரத்ன என்பவரால் உரிமை கோரப்படும் காணி தெற்கு: நீ.பீ.கருணாரத்ன என்பவரின் காணி மற்றும் 3254ஆம் இலக்க நில வரைபடத்தின் லொட் 01 மேற்கு: 3254ஆம் இலக்க நில வரைபடத்தின் லொட் 01 ஆகிய எல்லைகளைக்கொண்ட காணியின் பரப்பளவானது ஒன்பது ஏக்கர் மூன்று றூட் மற்றும் முப்பத்திரெண்டு புள்ளி ஐந்து ஒன்பது பேர்ச் (ஏ.09-றூ.03-பே.32.59) ஆகும்.

இந்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு கே.சீ.கொடிதுவக்கு என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2020 மார்ச் 06ஆம் திகதியிடப்பட்ட 427ஆம் இலக்க பிணைமுறியின் கீழ் அடகு வைக்கப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**(திருமதி) வீ.ஏ. பரணகம**
**சட்டத்தரணி,**
**உதவிப் பொது முகாமையாளர் - சட்டம்**

# தொழிற்சங்கங்களின் போராட்டத்தால் மலையகத்தின் இயல்புநிலை ஸ்தம்பிதம்







மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

**(அந்துவன் - கினிகத்தேனை - பெல்மதுளை நிருபர்கள் )**

நாடளாவிய ரதியில் தொழிற்சங்கங்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தால் நேற்று (15) மலையகத்தின் இயல்புநிலை ஸ்தம்பித்தது.

அரச வைத்தியர்கள், விசேட வைத்திய நிபுணர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மருத்துவ பீட விரிவுரையாளர்கள், மின்சார பொறியியலாளர்கள், வங்கி சேவை ஊழியர்கள், பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள், வீதி அபிவிருத்தி, கல்வி நிர்வாகம், நில அளவைத் திணைக்களம், வருமான வரி உள்ளிட்ட 47 தொழிற்சங்கங்கள் இணைந்தே பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடுகின்றன.

நியாயமற்ற வரி விதிப்புக்கு எதிர்ப்பு உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்தே இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன் தாக்கம் மலையகப் பகுதிகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

தூர பகுதிகளில், தூர பிரதேசங்களிலுள்ள தோட்டங்களிலிருந்து பிரதான மற்றும் பிரதேச வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைபெற வந்த மக்கள் இன்னல்களை எதிர்கொண்டனர். ஏமாற்றத்துடன் வலிகளை சுமந்தவாறு வீடுகளை நோக்கிப் பயணிப்பதை காணமுடிந்தது.

சில நோயாளிகள் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கடுமையாக சாடியதுடன், மேலும் சிலர் அரசுமீது சொற்கணைகளைத் தொடுத்தனர்.

அதேவேளை, பாடசாலைகளுக்கு அதிபர், ஆசிரியர்கள் சமுகமளிக்கவில்லை. மாணவர்களின் வருகையும் இருக்கவில்லை. விடயம் அறியாமல் பாடசாலைக்கு சமுகமளித்த ஒருசில மாணவர்கள் திரும்பிச்சென்றனர்.

மலையகப் பகுதிகளிலுள்ள தபால் நிலையங்களிலும், புகையிரத நிலையங்களிலும் பணிகள் இடம்பெறவில்லை. அரச வங்கிகள் உட்பட பல துறையினரும் இப்போராட்டத்துக்கு ஆதரவு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தொழிற்சங்கப் போராட்டத்தால் கினிகத்தேனை மற்றும் வட்டவளை ஆகிய பிரதேசங்களிலுள்ள வைத்தியசாலைகள் மற்றும் பாடசாலைகள், தபால்நிலையம் அனைத்தும் நேற்று (15) மூடப்பட்டிருந்தன.

கினிகத்தேனை மற்றும் வட்டவளை பொது வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவில் வைத்தியர்கள் வருகையின்றி மூடப்பட்டிருந்ததால் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களுக்குள்ளாகினர்.

அரசாங்கம் தபால் சேவையை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தியிருந்தாலும் கினிகத்தேனை தபால் நிலையம் மூடப்பட்டு ஊழியர்கள் பணிப்புறக்கனிப்பில் ஈடுபட்டிருந்தனர். இதனால் இப்பிரதேசத்திற்கான தபால் சேவைகள் இடம்பெறவில்லை.

## பெருந்தோட்ட நிலங்களை வெளியார் ஆக்கிரமிப்பதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது தோட்ட நிர்வாகம்

# சட்டங்களும் கெடுபிடிகளும் தொழிலாளர்களுக்கு மட்டுமா?



### நடவடிக்கை எடுக்காவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையூடாக தீர்வு காணப்படும் என்கிறார் வடிவேல் சுரேஷ் எம்.பி.

''நமுனுகுல பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்கும் பதுளை நமுனுகுல இதகல தோட்டத்தின் பெருந்தோட்டக் காணிகளை பலவந்தகமாக வெளியார் ஆக்கிரமித்துள்ளனர். நிலைமை அறிந்தும் தோட்ட நிர்வாகம் மௌனம் காக்கின்றது'' - என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெருந்தோட்டங்களில் தொழில் புரியும் தொழிலாளர்கள் தங்களுடைய நலனுக்காக மலசலகூடத்தை விஸ்தரித்தாலோ அல்லது சமையலறையை விஸ்தரிப்பு செய்தாலோ தொழிலாளர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ளும் தோட்ட நிர்வாகம், இன்று இதகல தோட்டத்தில் 50 ஏக்கர் காணியை வெளியார் ஆக்கிரமிப்பு செய்திருந்தும் கூட மௌனிப்பது ஏன்? இதன் பின்னணி என்ன?

காணி சுவீகரிப்பு விளைவாக இதகல தோட்டத் தொழிலாளர்கள் அச்சமடைந்துள்ளார்கள், மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

நிலைமை தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு நமுனுகுல பெருந்தோட்ட நிறுவனத்திற்கும் அறிவித்துள்ளேன்.

தோட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கை ஒன்றின் ஊடாக பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும்

மேலும் மலையகப் பெருந்தோட்டக் காணிகளை வெளியார் அபகரிக்கின்ற செயற்பாடு தொடர்கின்றது. இவ்விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் பலமுறை நான் எடுத்துரைத்துள்ளேன். பெருந்தோட்ட மலையக மக்களின் காணி உரிமை தொடர்பில் முறையான தீர்வொன்று பெற்றுத் தரப்படவேண்டியது அவசியமாகும்'' - என்றார்.

## மாவனல்லை பிரதேச சபையின்

# தலைவர் பதவி நீக்கம்

**(எம்.எஸ். அமீர் ஹுசைன் - ஏ.ஏ.எம்.பாயிஸ்)**



மாவனல்லை பிரதேச சபையின் தலைவர் ரங்கொத் ஜேடிகே நொயெல் ஸ்ரீவன் சப்ரகமுவ மாகாண சபை ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவயால் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பதவிநீக்கம் தொடர்பான அறிவித்தலை செய்யும் வகையிலான விசேட வர்த்தமானி அறிவித்தலை ஆளுநர் (13.03.2023) கையொப்பமிட்டு வெளியிட்டுள்ளார். அதன்படி உடனடியாக அமுலாகும் வகையில் 14ஆம் திகதி முதல் இந்தப் பதவிநீக்கம் அமுலுக்கு வருகின்றது.

கட்டிட நிர்மாணம் ஒன்றுக்கான வரைபடத்திற்கு பிரதேச சபையின் அங்கீகாரம் வழங்குவதற்காக அதன் உரிமையாளரிடமிருந்து 20 இலட்சம் ரூபா இலஞ்சம் பெற்றுக்கொண்டபோது இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகளால் 2023 ஜனவரி 13ஆம் திகதி வசமாக மாட்டிக்கொண்டார். அந்தச் சந்தர்ப்பத்தில் அவரும் அவரது வாகனச் சாரதியும் பிடிபட்டனர்.

இவ்வாறு நெயெல் ஸ்ரீவன் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட பின்னர் அது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவந்த நிலையில், சப்ரகமுவ மாகாண சபை ஆளுநர் ஓய்வுபெற்ற நீதிமன்ற அதிகாரி ஒருவரின் தலைமையில் ஒரு குழுவை நியமித்து பிரதேச சபையின் தலைவர் மீதான இலஞ்சம் பெற்றமை தொடர்பான குற்றச்சாட்டுகளின் உண்மைத்தன்மை பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க பணிப்புரை வழங்கியிருந்தார்.

குறித்த அதிகாரியால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் இவர் இலஞ்சம் பெற்றமை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டிருப்பதால் பிரதேச சபையின் உறுப்பினர் பதவியில் இருந்தும் தலைவர் பதவியில் இருந்தும் பதவிநீக்கம் செய்வதாக விசேட வர்த்தமானி அறிவித்தலில் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

# இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் யாழில் ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு






இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் நேற்று (15) புதன்கிழமை யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

சம்பள அதிகிப்பை வழங்கக் கோரியும், வரி அறவீட்டை நிறுத்தக் கோரியும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைகளில் பதாகைகளை தாங்கியவாறு 20,000 உதவித் தொகையை உடனடியாக வழங்க வேண்டும். மூன்றில் இரண்டு பங்கு சம்பளத்தை வழங்க வேண்டும், மாணவர்களின் போஷனை குறைபாட்டை நிவர்த்திசெய், பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களை கொடு உள்ளிட்ட பல்வேறு பதாகைகளை தாங்கியவாறு கோஷம் எழுப்பி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

# மன்னாரில் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுப்பு

### மாணவர்கள் - நோயாளர்கள் உட்பட பொதுமக்கள் பாதிப்பு





**(மன்னார் நகர் நிருபர்)**

நாடளாவிய ரீதியில் பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தி இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் நேற்று (15) முன்னெடுக்கப்படும் போராட்டத்தின் காரணமாக நாடுதழுவிய ரீதியில் பல பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, மன்னார் மாவட்டத்தில் பல பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் காணப்படுவதுடன், பரீட்சை நடவடிக்கைகளும் பிற்போடப்பட்டுள்ளன.

அதேநேரம், இலங்கை ஆசிரியர் தொழிற்சங்கப் போராட்டத்திற்கு மன்னார் மாவட்ட ஆசிரியர்களும் பூரண ஆதரவு வழங்கியிருந்தனர்

சில பாடசாலைகளுக்கு மாணவர்கள் வருகை தந்த நிலையில், ஆசிரியர்கள் பணிக்கு வராமையினால் மாணவர்கள் வீடுகளுக்குத் திரும்பிச்சென்றதையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.


அதேநேரம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் சுகாதாரப் பணியாளர்களும் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்த நிலையில் அத்தியாவசியமான அவசர சேவை பிரிவு மட்டுமே செயல்பாட்டில் இருந்தது.

வங்கி ஊழியர்களின் பகிஷ்கரிப்பு காரணமாக வங்கிச் சேவைகளும் இடம்பெறவில்லை.

புகையிரத ஊழியர்களின் விடுமுறை இரத்துசெய்யப்பட்டதன் காரணமாக புகையிரத சேவை இடம்பெற்று வருவதுடன், அரச மற்றும் தனியார் பஸ் சேவைகள் வழமைபோன்று இயங்குகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# வடமராட்சியில் வீடொன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்

### இரு மோட்டார்சைக்கிள்கள் எரிப்பு

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் மேற்குப் பகுதியில் நேற்று (15) புதன்கிழமை அதிகாலை வீடு ஒன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதில் வீட்டின் ஒரு பகுதி மற்றும் மோட்டார்சைக்கிள்கள் இரண்டு எரிந்துள்ளன.

அதிகாலை 12.30 மணியளவில் குறித்த தாக்குதல் சம்பவம் நடத்தப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

நாகர்கோவில் பகுதியில் மயானம் ஒன்றுக்கு சுற்றுமதில் அமைக்கும் முயற்சியின் தொடராக ஏற்பட்ட முறுகல்நிலையை அடுத்து கடந்த திங்கட்கிழமை இரவு பொலிஸாருக்கும் மக்களுக்கு இடையில் மோதல் போக்கு ஏற்பட்டிருந்தது.

இதன்போது துப்பாக்கிப் பிரயோகமும் தடியடியும் பொலிஸார் மேற்கொண்டதாக மக்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பகல் இரண்டு தரப்புகளும் பொலிஸ் அதிகாரிகள் முன்னிலையில் சமரசத்தில் ஈடுபட்ட நிலையில் மயானத்திற்கான மதில் அமைக்கும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று அதிகாலை வீடு ஒன்றின் மீது பெற்றோல் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# விடத்தற்பளையில் கள்ள மணல் அகழ்ந்த ஒருவர் கைது

**(சாவகச்சேரி நிருபர்)**

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விடத்தற்பளை பகுதியில் நேற்று (15) புதன்கிழமை காலை சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டதுடன், மணல் அகழ்விற்கு பயன்படுத்திய உழவு இயந்திரமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கொடிகாமம் இராணுவத்தினர் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையின்போதே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.




***தமிழகத்தின் பிரபல பேச்சாளர் திருமதி கவிதா ஜவகர், நூற்றாண்டு காணும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 'ஆசிரியம்' என்ற பொருளில் நேற்று (15) காலை சிறப்புரையாற்றினார். இதன்போது கலாசாலை சமூகத்தினர் அவரை பொன்னாடை போர்த்தியும் நினைவுச்சின்னம் வழங்கியும் கௌரவித்தனர்.***

# கொழும்பு கோட்டை - மாலபே இலகு புகையிரதத் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க அரசாங்கம் தயார்

கொழும்பு கோட்டை - மாலபே இலகு புகையிரதத் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க அரசாங்கம் தயாராகி வருகிறது.

அதற்கான மாற்று முன்மொழிவுகளை பெறுவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அண்மையில் அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்துள்ளார்.

கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் நிலவும் கடுமையான போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வாக இந்த இலகு புகையிரதத் திட்டத்தை அமைக்க முன்மொழியப்பட்டது.

கொழும்பு, மாலபே உள்ளிட்ட புறநகர்ப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான அரச ஊழியர்கள் பணிபுரிவதால், இந்த புகையிரதச் சேவையின் மூலம் நேரத்தையும் பணத்தையும் மிச்சப்படுத்த முடியுமென அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நிலம் கையகப்படுத்திய பிறகு, இந்தத் திட்டம் 2020இல் தொடங்கி 2024 நடுப்பகுதியில் முடிக்கப்பட ஏற்பாடாகியிருந்தது.

இந்தத் திட்டத்திற்கான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியை ஜப்பானின் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) வழங்குகிறது. அதற்காக ஜப்பான் அரசாங்கம் 1,850 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருந்தது.

ஆனால், கடந்த காலங்களில் நாடு எதிர்கொண்ட பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகள் காரணமாக இந்த இலகு புகையிரதத் திட்டம் நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஜப்பானுக்கான கடந்த உத்தியோகபூர்வ விஜயத்தின்போது இடம்பெற்ற இருதரப்பு கலந்துரையாடலின் விளைவாக இரத்துசெய்யப்பட்ட இலகு புகையிரதத் திட்டத்தை மீள ஆரம்பிக்க ஜப்பான் அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

16 கிலோமீற்றர் நீளம் மற்றும் 16 நிறுத்தும் நிலையங்களுடன் நிர்மாணிக்கப்படவிருக்கும் இந்தப் புகையிரத சேவையின் ஊடாக மாலபேயிலிருந்து கொழும்பு கோட்டைக்கு 30 நிமிடங்களில் பயணிக்க முடியும்.

இந்த ரயில் போக்குவரத்து நெரிசல் நேரங்களில் 4 நிமிடங்களுக்கும், சாதாரண நேரங்களில் 10 நிமிடங்களுக்கும் ஒரு ரயில் நிலையத்தில் நிறுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

## புதிய வரிக்கொள்கைக்கு எதிர்ப்பு:
# நுவரெலியாவில் கவனயீர்ப்புப் போராட்டம்



(செ.திவாகரன்)

புதிய வரி அறவீட்டுக்கு எதிராக நுவரெலியா பிரதான அஞ்சல் நிலைய ஊழியர்கள் இணைந்து நுவரெலியா பிரதான அஞ்சல் நிலையத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

குறிப்பாக, கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தற்போது அரசாங்கத்தின் சட்டவிரோதமான வரிக்கொள்கை, வைத்திய சாலைகளில் நிலவும் மருந்து மற்றும் உபகரணங்களுக்கான தட்டுப்பாடு, மின்சார கட்டணம் அதிகரிப்பு, அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாக தெரிவித்து குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன், தபால் ஊழியர்களுக்குத் தேவையான சில கோரிக்கைகளை முன்வைத்தும் அரசாங்கத்துக்கு எதிரான சுலோகங்களை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பியும் ஆர்ப்பாட்டத்தில் சுமார் ஒரு மணித்தியாலம் ஈடுபட்ட பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்துசென்றனர்.

# கம்பிரிகஸ்வெவ மனாருல் உலூம் பாடசாலைக்கு 4 வகுப்பறைகளைக்கொண்ட புதிய கட்டடம்







(அஷ்ரப் ஏ சமத்)

அநுராதபுரம் மாவட்டம் கம்பிரிகஸ்வெவ மனாருல் உலூம் மகா வித்தியாலயத்திற்கு குவைத் நாட்டு பரோபகாரியின் நிதியொதுக்கீட்டில் நான்கு வகுப்பறைகளைக் கொண்ட புதிய கட்டட நிர்மாணத்திற்கான அடிக்கல் நேற்று முன்தினம் (14) கல்லூரி முன்றலில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு அநுராதபுர பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமானின் வேண்டுகோளில் இலங்கைக்கான குவைத் நாட்டுத் தூதுவர் கலாப் எம்.புதையிர் வழிகாட்டலில் அல் ஹிமா இஸ்லாமிய அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் நூறுல்லாஹ் (நளீமியின்) முயற்சியில் குவைத் இஸ்லாமிய கெயார் அமைப்பின் ஊடகவே இவ் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கான முழு நிதியினையும் குவைத் நாட்டின் கொடையாளி நதா அப்துல் அசீஸ் பின்த தலாமாவின் நிதியுதவித் திட்டத்தின் கீழ் இத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

இலங்கையில் குவைத் அரசாங்கம் வறுமையில் வாடும் மக்களுக்கும், கல்வி உயா்கல்வி, சுகாதாரத்துறைக்கு கூடுதல் நிதி உதவித் திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. குவைத் இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களின் கட்டிடங்கள் மருத்துவ பீடங்கள், பௌதீகக் ம வள குறைபாடுகள், உள்ள 27 பாடசாலைகளில் வகுப்பறைக் கட்டிடடங்களையும் சுகாதாரத்துறை, வாழ்வதாரம், இயற்கை அனா்த்தம், வீடமைப்பு, குடிநீர் போன்ற பல்வேறு துறைகளுகளில் இலங்கைக்கு தொடா்ச்சியாக மூவனங்களுக்கும் உதவி வருவதாக அஷ்ஷேக் நூறுல்லஹ் மௌலவி அங்கு உரையாற்றும்போது தெரிவித்தார்.

# நோர்வூட்டில் துப்பாக்கியுடன் ஒருவர் கைது



(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சென்ஜோன் டிலரி பகுதியில் கைத்துப்பாக்கியுடன் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹட்டன் நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

சென்ஜோன் டிலரி பகுதியில் வீடொன்றிலிருந்து கைத்துப்பாக்கி மீட்கப்பட்டதுடன் சந்தேகத்தின்பேரில் இளைஞன் ஒருவரும் திங்கட்கிழமை (13) இரவு கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட இரண்டு பிள்ளைகளின் தந்தையான குறித்த சந்தேகநபரை நேற்று முன்தினம் (14) நோர்வூட் பொலிஸார் ஹட்டன் மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போதே நீதிபதி எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் இராணுவத்தில் கடமையாற்றி ஏழு மாதங்களுக்கு முன்னர் விலகியவர் என பொலிஸார் தெரிவித்தனர்.



பலஸ்தீன தூதரகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பலஸ்தீன நில தின கலைக் கண்காட்சி நேற்று (15) கொழும்பு 7, லயனல் வென்ட் கலையரங்கில் பிற்பகல் 12:30 மணிமுதல் இரவு 8 மணிவரையிலும், இன்று மற்றும் நாளை காலை 9 மணிமுதல் இரவு 9 மணிவரையிலும் நடைபெறவுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று இதில் கலந்துகொண்டு பார்வையிட்டார். நான்கு முன்னணி ஓவியர்களின் ஓவியங்களால் இந்தக் கண்காட்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.

(படப்பிடிப்பு – சமன் அபேசிறிவர்தன)

# சட்டவிரோதமாக கடலட்டைகளைப் பிடித்த எண்மர் கடற்படையினரால் கைது



மன்னார் சிலாவத்துறை மற்றும் வான்கலை கடற்பரப்புகளில் சட்டவிரோதமாக கடல் அட்டைகளைப் பிடித்த 08 பேரை கடற்படையினர் கைதுசெய்தனர்.

சிலாவத்துறை கடற்பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி கடல் அட்டைகளைப் பிடித்த மூவரும் வான்கலை கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ஐவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது பிடிக்கப்பட்ட கடல் அட்டைகளும் அதற்குப் பயன்படுத்திய டிங்கி படகு மற்றும் உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட நபர்கள் 33 முதல் 54 வயதுக்குட்பட்ட கற்பிட்டி மற்றும் வான்கலையில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் அவர்களது உபகரணங்கள் மற்றும் கடல் அட்டைகளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கற்பிட்டி மற்றும் மன்னார் கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# இலங்கைக்கே உரித்தான புதிய ஓர்கிட் இனம் கண்டுபிடிப்பு



(கண்டி நிருபர்)

இலங்கைக்கே உரித்தான புதிய ஓர்கிட் இனமொன்று அண்மையில் சப்ரகமுவ மாகாணத்தில் காணப்படுவதாக பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்ட கள ஆய்வு ஒன்றின் மூலம் கண்டுபிடித்துள்ளனர்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது;

மேற்படி ஓர்கிட் இனம் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து இலங்கைக்கே உரித்தான ஓர்கிட் இனங்களின் எண்ணிக்கை 63 ஆக உயர்ந்துள்ளதுடன், இலங்கையிலுள்ள மொத்த ஓர்கிட் இனங் களின் எண்ணிக்கை 194 ஆகவும் உயர்ந்துள்ளது.

அத்துடன், இந்த ஓர்கிட் இனத்திற்கு இலைகள் கிடையாது, பூ மட்டுமே வெளிவருகிறது. சருகுகளுக்கு மேலே மேற்படவே வெளியாகியுள் ளதைப் படத்தில் காணலாம். இத்தாவர இனத்திற்கு சர்வதேச மொழிகளில் குறிப்பிடப்பட்ட ஒரு பெயர் இல்லாத காரணத்தாலும் அது 'புஷ்பராகம்' வகையைச் சேர்ந்த மாணிக்கக்கற்களின் நிறத்தை ஒத்ததாக இருப்பதுடன், மாணிக்கக்கல் காணப்படும் இரத்தினபுரி பிரதேசத்தில் காணப்பட்ட காரணத்தாலும் சூழலியலாளர்கள் இதனை 'புஷ்பராகம்' என அழைக்க முன்வந்துள்ளனர்.

வெகு விரைவில் இந்த தாவர இனம் பற்றிய வெளியீட்டு வைபவமொன்று இடம்பெறவுள்ளதாகவும் பேராதனைப் பல்கலைக்கழக ஆய்வு அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேற்படி தாவர இனம் பற்றிய ஆய்வுகள் இன்னும் பலராலும் மேற்கொள்ளப்பட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது.

# டயலொக் ஆசிஆட்டா ACCAவின் 'நிலைத்தன்மை அறிக்கையிடல்' விருதுகள்

டயலொக் ஆசிஆட்டா ACCA வின் 'நிலைத்தன்மை அறிக்கையிடல் விருதுகள் – 2022'இற்கான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

'நிலைத்தன்மை அறிக்கையிடல் விருதுகள் – 2022' இற்காக ACCAவினால் டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி நிறுவனம் வெற்றியாளராகவும், பொதுச் சேவைகள் பிரிவில் வெற்றியாளராகவும் அங்கீகரித்து கௌரவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான விருதுகள் தொடர்பாக பல்வேறு தொழில்துறைகளைச் சார்ந்த நிறுவனங்களிடமிருந்து கவனத்தை ஈர்க்கக்கூடிய அளவிலான ஏராளமான விண்ணப்பங்களை பெற்றிருந்தபோதிலும், அவற்றுள் டயலொக் நிறுவனமே அதன் விரிவான மற்றும் நன்கு கட்டமைக்கப்பட்ட நிலைத்தன்மை அறிக்கைக்காக அங்கீகரிக்கப்பட்டது. அதன்படி டயலொக் நிறுவனமானது, நாட்டின் முதல் மூலோபாயம், நிலைத்தன்மை சிக்கல்களின் பொருள் பற்றிய தெளிவான புரிதல் மற்றும் அவற்றை நிவர்த்திசெய்வதற்கான உறுதியான அர்ப்பணிப்பு ஆகியவற்றிற்காக நடுவர் குழுவால் பாராட்டப்பட்டது. மேலும், இது டயலொக்கின் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கான அதன் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

"ACCAயிடமிருந்து இந்த அங்கீகாரத்தைப் பெறுவதில் நாங்கள் பெருமையடைகிறோம், இது நிலைத்தன்மைக்கான எங்கள் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துகிறது" என டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் "நிலைத்தன்மை என்பது எங்கள் வணிக மாதிரியின் மையப் பொருளாக அமைந்துள்ளது மற்றும் நாம் செய்யும் எல்லா விடயங்களிலும் அதுவே நமது நோக்காக உட்பொதிந்துள்ளது. அதற்கமைய, சமூகத்தில் எங்களின் தாக்கத்தையும், நிலைத்தன்மை அறிக்கையின் தரத்தையும் தொடர்ந்து மேம்படுத்துவதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். நமது பங்குதாரர்கள் அனைவருக்கும் நிலையான எதிர்காலத்தை நோக்கி நாங்கள் தொடர்ந்து பணியாற்றுவோம்" எனவும் குறிப்பிட்டார்.

2004ஆம் ஆண்டு தொடக்கம் வருடாந்தம் வழங்கப்பட்டு வருகின்ற ACCA நிலைத்தன்மை அறிக்கையிடல் விருதானது, வணிக உத்தி, பெருநிறுவன நிர்வாகம் மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றுக்கு இடையேயான வலுவான தொடர்பை மேம்படுத்தி, நிலைத்தன்மை அறிக்கையிடலில் சிறந்து விளங்கும் நிறுவனங்களை அங்கீகரித்து விருது வழங்கி கௌரவித்து வருகின்றது. இந்த விருதுகள் அறிக்கையிடல் மற்றும் நடைமுறைகளில் நிலைத்தன்மைக்கு உறுதிபூண்டுள்ள நிறுவனங்களை ஊக்குவித்து அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




படத்தில் இடமிருந்து வலமாக டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் டிஜிட்டல் உள்ளடக்க நிபுணர் திஷாரா பெரேரா, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் இடர் மற்றும் இணக்கப் பிரிவு குழுமத் தலைவர் அசங்க பிரியதர்ஷன, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழும தலைமை நிதி அதிகாரி Hong Zhou Wong, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் நிலைத்தன்மை நிறைவேற்றுப் பிரிவு நிபுணர் அஷினி பொதுபிட்டிய, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழு நிறுவன திட்டமிடல் மற்றும் வியூகத்தின் துணைத் தலைவர் முனேஷ் டேவிட், டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் சமூக புதுமை பிரிவு சிரேஷ்ட முகாமையாளர் அசித் டி சில்வா மற்றும் டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் நிலைத்தன்மை நிறைவேற்றுப் பிரிவு நிபுணர் ரக்சிகா நெடுமாறன்.

# தொழிற்சங்க நடவடிக்கைகளால் கல்வி செயற்பாடுகள் முற்றாக பாதிப்பு








(மு.தமிழ்ச்செல்வன்)

நாடளாவிய ரீதியில் நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கைகளின் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் கல்விச் செயற்பாடுகள் முற்றாக பாதிக்கப்பட்டிருந்தன.

பாடசாலைகளுக்கு மாணவர்கள் சமுகமளிக்கவில்லை. ஒருசில பாடசாலைகளில் மாத்திரம் ஒருசில மாணவர்கள் சமுகமளித்தபோதும் கல்விச் செயற்பாடுக்ள இடம்பெறவில்லை, அத்தோடு வைத்தியசாலைகளில் அவசர நோயாளர் சேவைகள் மாத்திரம் இடம்பெற்றன. ஏனைய சேவைகள் எவையும் இடம்பெறவில்லை. தனியார் போக்குவரத்துச் சேவைகளும் பாதிக்கப்பட்டிருந்தன. அரச திணைக்களங்களில் வெளிமாவட்டங்களிலிருந்து வருகின்ற உத்தியோகத்தர்கள் பெருமளவுக்கு சமுகமளிக்கவில்லை, பொதுமக்களும் அலுவலகங்களுக்கு செல்வது மிக மிகக் குறைவாகக் காணப்பட்டது.

# மட்டக்களப்பில் அத்தியாவசிய சேவைகள் ஸ்தம்பிதம்










(கனகராசா சரவணன், கல்லடி செய்தியாளர்)

அரசின் ஒடுக்குமுறைக்கு எதிராக மக்கள் நாடளாவிய ரீதியில் முன்னெடுத்துள்ள வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் மட்டக்களப்பு ஆசிரியர் சங்கங்கள், வைத்தியசாலை ஊழியர்கள், வங்கி ஊழியர்கள், தபால் நிலைய ஊழியர்கள் என அனைவரும் நேற்று புதன்கிழமை (15) பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதனையடுத்து பாடசாலை மற்றும் அஞ்சல் நிலையங்கள், வங்கி நடவடிக்கைகள் என அனைத்து நிலையங்களும் முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

நாடளாவிய ரீதியில் அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து 8 அம்சக் கோரிக்கையை முன்வைத்து ஒரு நாள் பணிப்புறக்கணிப்பிற்கு அழைப்பு விடுத்திருந்தன. இதனையடுத்து, மட்டக்களப்பில் ஆசிரியர்களின் பணிப்புறக் கணிப்பையடுத்து பாடசாலைகள் திறந்திருந்த போதிலும் மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தராததையடுத்து, பாடசாலைகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்தன.


அதே வேளை, மாவட்டத்திலுள்ள வைத்திய சாலைகளில் சிற்றூழியர்களின் பணிப்புறக் கணிப்பையடுத்து வெளிநோயாளர் பிரிவு முற்றிலும் ஸ்தம்பிதமடைந்திருந்ததுடன், சத்திரசிகிச்சை மற்றும் ஏனைய பிரிவுகள் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

மேலும், அஞ்சல் நிலையங்கள் யாவும் மூடப் பட்டு செயலிழந்திருந்ததுடன், தனியார் வங்கி களைத் தவிர ஏனைய வங்கி நடவடிக்கை களும் செயலிழந்திருந்தன.

இதேவேளை, புகையிரத ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக மட்டக்களப் பிலிருந்து கொழும்புக்கு இடையிலான மூன்று புகையிரத சேவைகளும் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

இதேவேளை, மட்டக்களப்பு காந்திபூங்கா வளாகத்தில் பாரிய ஆர்ப்பாட்டத்தை முன் னெடுத்த ஆசிரியர்கள், "எடுத்த காசுக்கு வங்கி வட்டி மேலும் மேலும் அதிகமாச்சு, சம்பளமும் காணாது வரி செலுத்தப் போதாது, வங்கித் திருடன் அரசனானான் நாட்டைத் தின்று ஏப்பம் விட்டான், நாட்டைச் சுரண்டுவோர் அவனி யிலே நாட்டை உயர்த்துவோர் வீதியிலே, ஊழல்வாதிகளை விரட்டிடுவோம் நாட்டைச் செழிப்பாய் ஆக்கிடுவோம்" போன்ற கோஷங் களை எழுப்பியவாறு "அச்சுறுத்தலைவிடுத்து சுபோதினி அறிக்கையின் பிரகாரம் சம்பள முரண்பாட்டை நீக்கு, இடைக்காலக் கொடுப் பனவாக 20,000 ரூபாவை உடன் வழங்கு, ஆசிரியர், அதிபர், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் பிரிவெனா ஆசிரியர்களின் பதவியுயர்வு மற்றும் பிரச்சினைகளுக்கு உடனே தீர்வு கொடு'' போன்ற சுலோகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு கலந்துகொண்டிருந்தனர்.



நாடு தழுவிய ரீதியில் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்புகள் நேற்று(15) புதன்கிழமை முன்னெடுத்துள்ள தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக கல்முனை கல்வி வலயப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமுகமளிக்காமையினால் வெறிச்சோடிக் காணப்பட்டதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இதேவேளை தபால் நிலையம், அரச அலுவலகங்கள் என பெரும்பாலான அலுவலகங்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர். (எஸ்.அஷ்ரப்கான், பாறுக் ஷிஹான்)

## தென்கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்






(மாளிகைக்காடு செய்தியாளர்)

நாடு தழுவிய ரீதியில் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்புகள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் அவைகளை உடனடியாக தீர்க்குமாறு வலியுறுத்தியும் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் தமது தொடர் போராட்டத்தின் ஒரு அங்கமாகவும் கல்விசாரா ஊழியர்கள் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இப்போராட்டமானது நேற்று புதன்கிழமை(15) பல்கலைக்கழக முன்றலில் இடம்பெற்றது.

''பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைக்கு உடனடி தீர்வு வேண்டும், மின்சாரம், எரிபொருள், எரிவாயு ஆகியவற்றின் விலைகளை குறை, நியாயமற்ற வரிக்கொள்கையை உடனடியாக திருத்து, சம்பள முரண்பாட்டினை தீர்க்கும் குழுவின் அறிக்கையினை உடனடியாக நடைமுறைப்படுத்து, அனைத்து பல்கலைக்கழகங்களையும் மீளவும் திறந்து கல்வி உரிமையை உறுதிப்படுத்து, பல்கலைக்கழக விவகாரங்களில் கல்வி அமைச்சரின் மௌனம் ஏன், மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகள் மீது கைவைக்காதே, ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையை உடனடியாக உருவாக்கு, பல்கலைக்கழக ஊழியர்களின் இல்லாமலாக்கப்பட்ட ஊதியத்தை உடனடியாக வழங்கு'' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் அரசாங்கத்தின் நியாயமற்ற வரிக்கொள்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளையும் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

## அக்கரைப்பற்றிலும் பொதுச்சேவைகள் பாதிப்பு




(ஆலையடிவேம்பு செய்தியாளர்)

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்றில் நேற்று புதன்கிழமை(15) அரச வங்கி ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள், வைத்தியர்கள், தபால்நிலைய ஊழியர்கள் உள்ளிட்டோர் அரசின் வரி அறவீட்டுத் திட்டம் மற்றும் வழங்கப்படாத சம்பள உயர்வு, அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் ஆகியவற்றைக் கண்டித்து கடமைகளிலிருந்து விடுபட்டு தமது எதிர்ப்பினை வெளியிட்டனர்.

அக்கரைப்பற்றில் அமைந்துள்ள அரச வங்கிகள் நேற்றுக்காலைமுதல் மூடப்பட்டிருந்தமையால் வாடிக்கையாளர்கள் பாதிக்கப்பட்ட அதேவேளை, தனியார் வங்கிகள் வழமைபோன்று செயற் பட்டதை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை, பாடசாலை ஆசிரியர்களின் பணிப்பகிஷ்கரிப்பால் நேற்றையதினம் நடைபெறவிருந்த மூன்றாம் தவணைப் பரீட்சையானது நடைபெறவில்லை. ஆயினும், சில பாட சாலைகளில் அதிபர் வருகை இருந்தபோதிலும் ஆசிரியர்கள், மாணவர்கள் சமுகமளிக்கவில்லை. இதனால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்படுவதை பெற்றோர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

அரச மற்றும் தனியார் வங்கி ஊழியர்கள் அரசின் வரி அறவீட்டுத் திட்டத்திற்கு எதிராக தமது எதிர்ப்பினை தெரிவிக்கும் வகையிலான அமைதியான பேரணி ஒன்றினை அண்மையில் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக்கல்வி அலுவலகத்துக்குட்பட்ட மீராவோடை உதுமான் வித்தியாலயத்திற்கு 20 இலட்ச ரூபா நிதியுதவி வழங்கப்பட் டுள்ளது. பாடசாலை காணி கொள்வனவுக் காக அதிபர் எம்.பி.முபாறக் ஓட்டமாவடி பிரதேச சபை முன்னாள் உறுப்பினரும் சமூக செயற்பாட்டாளருமான எம்.எம்.எம். ஹலால்தீன் ஹாஜியிடம் முன்வைத்த கோரிக்கைக்கமைய இந்நிதியுதவி செய்யப் பட்டுள்ளது. (மீராவோடை செய்தியாளர்)





தொழிற்சங்க நடவடிக்கையின்போது கல்முனை பிரதேச ஆசிரியர்கள் தொழிற்சங்க கூட்டமைப்பு நேற்று (05) கல்முனை தனியார் பஸ் தரிப்பு நிலையத்திற்கு முன் பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. நாடு தழுவிய ரீதியில் தொழிற்சங்கங் களின் கூட்டமைப்புகள் நேற்று புதன் கிழமை (15) முன்னெடுத்துள்ள தொழிற் சங்க நடவடிக்கையின் காரணமாக கல்முனை கல்வி வலயப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் வரவின்மையால் வெறிச்சோடிக் காணப்பட்டது.

(பாறுக் ஷிஹான், எஸ்.அஷ்ரப்கான்)



அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்டுள்ள புதிய வரி விதிப்புக் கொள்கைக்கு எதிராக நாடுதழுவிய ரீதியில் தொழிற்சங்கங்களால் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைக்கு திருகோணமலை மாவட்ட வைத்தியசாலை ஊழியர்கள் மற்றும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஆகியன ஆதரவு தெரிவித்து நேற்று புதன்கிழமை (15) பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர். தேசிய நீர்வளங்கல் வடிகாலமைப்புச் சபையினர் திருவண்ணாமலை பிரதேச பொறியியலாளர் காரியாலயத்திற்கு முன்னால் பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (அப்துல்சலாம் யாசீம்)



அரசினால் அமுல்படுத்தப்பட்டுள்ள புதிய வரிக்கொள்கை மற்றும் மக்களை அழுத்தத்துக்குள்ளாக்கும் பொருட்களின் விலையேற்றத்தினைக் கண்டித்து நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கைக்கு கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கத்தினரும் ஆதரவு தெரிவிக்கும்வகையில் கல்லடி மருத்துவப்பீடத்திற்கு முன்னால் நேற்று புதன்கிழமை (15) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்ட இவ்வார்ப்பாட்டத்தில் கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு சுமார் 60க்கும் மேற்பட்ட கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கலந்துகொண்டனர்.

(கல்லடி செய்தியாளர்)



பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அரசுக்கெதிரான தொழிற்சங்க கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும்வகையில் அம்பாறை மணிக்கூட்டுக் கோபுரத்திற்கருகில் தொழிற்சங்கப் போராட்டமொன்று நேற்று புதன்கிழமை(15) இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட அரச ஊழியர்கள் சுலோகங்கள் மற்றும் பதாகைகளை தாங்கியவாறு கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (மாவடிப்பள்ளி செய்தியாளர்)






அட்டாளைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டம் அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாவுல்லா தலைமையில் அட்டாளைச்சேனை பிரதேச கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஸாரப் மற்றும் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் சாபீர், பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.எல்.எம்.அமானுல்லா, உதவிப் பிரதேச செயலாளர் நஹிஜா முசாபீர், உதவித் தவிசாளர் எஸ்.எம்.ஹனிபா மற்றும் பிரதேச சபை செயலாளர் எஸ்.ஏ.பாயிஸ், உதவித் திட்டப் பணிப்பாளர் ஏ.எல்.மஜீத் மற்றும் பல திணைக்களத் தலைவர்களும் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

(திராய்க்கேணி செய்தியாளர்)

# சம்மாந்துறை ஜமாலியா வித்தியாலய கட்டிட நிர்மாணப்பணியில் 45 இலட்ச ரூபா மோசடி

## ★26 தடவைகள் முறைப்பாடளித்தும் தீர்வில்லை

## ★பாடசாலை முன்னாள் அபிவிருத்திக் குழுவினர் உரிய நடவடிக்கைகளை எடுக்கக் கோரிக்கை

**(மாளிகைக்காடு, சம்மாந்துறை செய்தியாளர்கள்)**

சம்மாந்துறை கல்வி வலயத்தின் கீழுள்ள கமு/சது/ ஜமாலியா வித்தியாலயத்தின் 45 இலட்ச ரூபா பெறுமதியான புதிய கட்டிட நிர்மாணப்பணியில் இடம்பெற்றுள்ள ஊழல் குறித்தும், பாடசாலை அதிபர் எம்.எம். மஹிசா பானுவின் இயல்புகள், அதிகார துஷ்பிரயோகங்கள் குறித்தும் முறைப்பாடு செய்யப்பட்டு அதுதொடர்பில் எதுவிதப் பயனும் இல்லையென பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழுவின் முன்னாள் செயலாளர் எம்.ஐ.எம்.றிஸ்விகான் தலைமையிலான பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவினர் தெரிவித்தனர்.

பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழுவின் முன்னாள் உறுப்பினர்களால் சம்மாந்துறையில் செவ்வாய்க்கிழமை(14) இரவு ஏற்பாடு செய்த ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போது கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தனர்.

மேலும் இந்த ஊழல்கள் இடம்பெற்று ஒன்றரை ஆண்டுகளில் மாகாண கல்வியமைச்சின் செயலாளருக்கு 04 தடவைகளும் மாகாண கல்விப் பணிப்பாளர்களாக பதவி வகித்தவர்களுக்கு 07 தடவைகளும் வலயக்கல்வி பணிப்பாளர்களாக பதவி வகித்த மூவருக்கும் என மொத்தமாக 26 தடவைகள் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன.

சம்மாந்துறை கல்வி வலயத்தின் கீழுள்ள கமு/சது/ ஜமாலியா வித்தியாலயத்தின் 45 இலட்ச ரூபா பெறுமதியான புதிய கட்டிட நிர்மாணப்பணியில் அதிபரால் ஊழல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாடசாலை அபிவிருத்திக் குழுவால் செய்யப்பட வேண்டிய வேலையை பாடசாலை அதிபர் வேறொரு பாடசாலை அதிபருக்கு கொந்தராத்து கொடுத்துள்ளார். அத்துடன், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவே வேலையை செய்ததாக பொய்யான மோசடி அறிக்கை ஒன்றையும் தயார் செய்துள்ளார்.

இவை தொடர்பாக நாம் கல்வித்திணைக்கள அதிகாரிகள் பலருக்கும் முறைப்பாடுகளை செய்தும் அவர்கள் எந்த நீதியான நடவடிக்கைகளையும் எடுக்காமல் அதிபரை காப்பாற்ற முயற்சிப்பதுடன் உடந்தையாகவும் இருக்கின்றனர்.

அதிபர், வலயக்கல்வி பணிப்பாளர் ஆகியோர் தொடர்பாக நாம் மாகாண கல்வி பணிப்பாளருக்கும், கல்வியமைச்சின் செயலாளருக்கும் முறையிட்டு நீதிக்காக காத்திருந்தோம். அந்த நீதி இன்னும் எங்களுக்கு கிடைக்கவில்லை. அதிபரும் இடமாற்றம் பெற்றுச்செல்ல விரும்புவதாக இது தொடர்பிலான நீதிமன்ற நடவடிக்கைகளில் தெரிவித்திருந்தும் அவர் இதுவரை இடமாற்றம் பெற்றுச் செல்லவில்லை.

இருப்பினும், ஏற்கனவே நாம் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, ஆளுநர் ஆகியோருக்கும் எழுத்துமூல முறைப்பாடுகளை மேற்கொண்டு பல கட்ட நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளோம். பல்வேறு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச முக்கியஸ்தர்கள், பிரதேச அரசியல் பிரமுகர்களின் கவனத்துக்கும் இந்த விடயங்களை கொண்டு வந்திருக்கின்றோம். ஆனால் அவர்களும் நீதியை பெற்றுத்தரவில்லை.

அதேபோல வெகுவிரைவில் ஜனாதிபதி, பிரதமர், கல்வி அமைச்சர் போன்றோரை சந்தித்து முறையிடுகின்ற முன்னெடுப்புகளை ஆரம்பித்துள்ளோம். எமது பாடசாலையில் பயில்கின்ற எமது பிள்ளைகளை பல வகைகளில் பழிவாங்குகின்றனர். எங்களின் பிள்ளைகளின் கல்வி வாழ்க்கை சீரழிகிறது. நாம் இந்த சலசலப்புகளுக்கு எல்லாம் அஞ்சப்போவதில்லை. நீதி கிடைக்கும் வரை தொடர்ந்தும் போராடுவோம். அதிபர் உடனடியாக மாற்றப்பட வேண்டும். அவர் மீது நடவடிக்கை எடுக்கத் தவறியோர் மீதும் உரிய சட்ட, நிர்வாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

பாடசாலையில் இரண்டு தடவைகள் செயலாளராக தெரிவான என்னிடம் இதுவரை செயலாளருக்கான எவ்வித பொறுப்புகளும் ஒப்படைக்கப்படவில்லை. போலியான கையொப்பங்கள், தீர்மானங்கள், தகவல்களை வைத்து பாடசாலை நிர்வாகம் இடம்பெற்று கொண்டிருக்கிறது. இவ்விடயங்கள் சகலவற்றுக்கும் கல்வி அதிகாரிகள் உடந்தையாக இருக்கிறார்கள். இது தொடர்பில் பெற்றோர்களின் கையொப்பங்கள் பெறப்பட்ட கோரிக்கைகள், முறைகேடு நடைபெற்றதாக சந்தேகிக்கும்



ஆவணங்கள், அதிபரை இடமாற்றம் செய்யக்கோரும் கோரிக்கைகளை மாகாண கல்விப்பணிப்பாளர், ஆளுநர் போன்றோருக்கு அனுப்பியுள்ளோம் என்றனர்.



**புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்கள் சிலவற்றுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. சமுர்த்தி வங்கிச் சங்க கூட்ட மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை(14) இடம்பெற்ற இந்நிகழ்வில், மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்ராஸ், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷீக், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சீ.ஏ.நஜீம் ஆகியோர் வழங்கி வைத்தனர். (மாவடிப்பள்ளி செய்தியாளர்)**

## 'போதையற்ற ரமழான்' மாநாடு கல்முனையில்

**(மாவடிப்பள்ளி செய்தியாளர்)**

கல்முனை ஹுதா ஜும்ஆப் பள்ளிவாசல் மற்றும் ஹுதா அழைப்பு வழிகாட்டல் பணியகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள மாபெரும் போதை ஒழிப்பு மாநாடொன்று கல்முனையில் இடம் பெறவுள்ளது. நாளை வெள்ளிக்கிழமை (17) ஹுதாத்திடலில் 'போதையற்ற ரமழான்' எனும் தொனிப்பொருளில் நடை பெறவுள்ள இம்மாநாட்டில், 'போதையற்ற சமுதாயத்தை உருவாக்குவோம்' எனும் தலைப்பில் அஷ்ஷெய்கு அப்துல் ஹமீட் ஷரயீயும் 'பொருளாதாரத்தை ஹலாலாகத் தேடிக்கொள்வோம்' எனும் தலைப்பில் அஷ்ஷெய்கு ரஸ்மி ஷாஹித் அமீனியும் 'அருள் நிறைந்த ரமழானே வருக' எனும் தலைப்பில் அஷ்ஷெய்கு சாபித் ஷரயீ ரியாயும் உரையாற்றவுள்ளனர்.

மாலை 5 மணி தொடக்கம் இரவு 9.30 மணிவரை இடம்பெறவுள்ள இந்நிகழ்வில், பொலிஸ் மற்றும் பாதுகாப்புத்தரப்பினரின் முக்கியஸ்தர்களும் பங்கு பெற்றவுள்ளதாக இதன் ஏற்பாட்டாளர்களான ஹுதா ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

## கல்முனை மாநகரசபைக்குள் அனுமதி பெறப்படாது கட்டடங்கள் நிர்மாணிப்பு



**(நிந்தவூர் செய்தியாளர்)**

கல்முனை மாநகரசபை எல்லைக்குட்பட்ட சாய்ந்தமருது மற்றும் கல்முனைக்குடி பிரதேசங்களில் கல்முனை மாநகரசபையின் அனுமதி பெறப்படாமல் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. உள்ளூர் வீதிகளையும் ஒழுங்கைகளையும் ஆக்கிரமித்து நிர்மாணிக்கப்படும் இப்புதிய கட்டட நிர்மாணங்களால் வீதிகள் ஒடுக்கப்பட்டு பொதுமக்களும் வாகனங்களும் பயணிப்பதற்கு மிகவும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

சில கட்டடங்கள், மின்கம்பம் மற்றும் தொலைபேசி கம்பம் நடப்பட்டிருக்கும் எல்லையையும் தாண்டி நிர்மாணிக்கப்படுகின்றன. சிலர் தொலைபேசிக் கம்பத்தையும் மின்கம்பத்தையும் வைத்தே வீடு கட்டியுள்ளனர். வீட்டுக்கு படி மற்றும் படிக்கு மதில் கட்டி வடிகான்களுக்கு மேலாக வீட்டின் எல்லை மீறி வந்துள்ளது. இதற்கு மேலதிகமாக சுவரின் கதவை வீதிப்பக்கமாக திறந்தும் வைத்துள்ளனர். கட்டட நிர்மாணப்பொருட்களும் வீட்டு இடிபாடுகளும் பல மாதங்களாக வீதியில் குவிந்து காணப்படுவதால் அடிக்கடி வீதி விபத்துகளும் ஏற்படுகின்றன.

எனவே, இந்த விடயத்தில் கல்முனை மாநகரசபை உடனடியாக நடவடிக்கை எடுக்கத்தவறும் பட்சத்தில் எதிர்காலத்தில் பெரிய வீதிகள் ஒடுங்குவதை எவராலும் தடுக்க முடியாது என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## துரைவந்தியமேடு கிராமத்தில் வயற்பாடசாலை அறுவடை விழா



**(பாண்டிருப்பு செய்தியாளர்)**

கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் செயற்றிட்டங்களில் ஒன்றான விவசாயிகளுக்கான வயற்பாடசாலை அறுவடை விழா சேனைக்குடியிருப்பு விவசாயப் போதனாசிரியர் பிரிவிலுள்ள துரைவந்தியமேடு கிராமத்தில் விவசாய தொழில்நுட்ப உதவியாளர் என்.மஹீஸாபானு ஒழுங்கமைப்பில் விவசாயப் போதனாசிரியர் எம்.எஸ்.நஜ்முர் றஹ்மான் தலைமையில் நடைபெற்றது.

இங்கு விவசாயிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறி வகைகள் அறுவடை செய்யப்பட்டன. இந்நிகழ்வில் சம்மாந்துறை வலய உதவி விவசாயப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.சல்மான், தலைமைப்பீட விவசாயப் போதனாசிரியர் எஸ்.எல்.எம்.றலீம், வலய விவசாயப் போதனாசிரியர் ஏ.பி.தஸ்லிம், பாடவிதான உத்தியோகத்தர் பி.குணநீதராஜா உட்பட விவசாயப் போதனாசிரியர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். இதன்போது விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து தெரிவிக்கப்பட்ட அதேவேளை, அதற்கான தீர்வுகள் தொடர்பிலும் அதிகாரிகளினால் விளக்கமளிக்கப்பட்டன.

## போதைப்பொருள் விழிப்புணர்வு நிகழ்வு



**(புளியந்தீவு செய்தியாளர்)**

போதைப்பொருள் பாவனையிலிருந்து நாட்டையும் நாட்டு மக்களையும் மீட்பதற்கு 'போதைப் பொருளற்ற நாடு சௌபாக்கியமான தேசம்' என்ற தொனிப்பொருளில் போதைப்பொருள் விழிப்புணர்வு நிகழ்வு வவுணதீவுப் பிரதேச செயலகப் பிரிவில் செவ்வாய்க்கிழமை(14) இடம்பெற்றது.

கிழக்கு மாகாண புனர்வாழ்வு பொறுப்பதிகாரி கேர்ணல் லால் கமகெதர தலைமையில் ஆரம்பமாகிய இந்நிகழ்வில், போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் காலப்போக்கில் நோயாளியாகவும் நோய்க்காவிகளாகவும் மாறுகின்றனர். இது இப்பிரதேசத்தில் பரவலாக காணப்படும் ஒரு நிகழ்வாகும். இவ்வாறான நிலையில், அவர்களது குடும்பங்கள் கலாசார சீரழிவுக்கும் பொருளாதார சீரழிவுக்கும் உள்ளாகின்றன என்றார்.

மேலும், துண்டுப் பிரசுரங்களை கையளித்தும் காணொளி மூலம் காட்சிப்படுத்தியும் மக்களுக்கு தெளிவுபடுத்தி வருகின்றோம். இச்செயற்பாடு மக்களின் மனதில் பதியும் என்று நம்புகிறேன். காலப்போக்கில் இச்செயற்பாடுகளின்மூலம் எமது இளைஞர்கள் மத்தியில் மாற்றங்கள் வரவேண்டும் என்பதே எமது முழுமையான நோக்கமாகும்.

போதைப்பொருள் உற்பத்தியையும் பாவனையையும் மக்கள் மத்தியில் இருந்து ஒழித்து சுபீட்சமான நாட்டைக் கட்டியெழுப்ப எம்மாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வெற்றி காண்போம் என்றார்.

## கன்னியா வெந்நீரூற்று முகாமைத்துவம் தொல்பொருள் திணைக்களத்திடம்

**(அப்துல்சலாம் யாசீம்)**

திருகோணமலை கன்னியா வெந்நீரூற்றின் வருமான முகாமைத்துவம் மற்றும் பராமரிப்புப் பணிகள் தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாக தொல்பொருள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்துக்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமாக போற்றப்பட்ட கன்னியா வெந்நீரூற்றுப் பகுதிகள் தற்போது, பௌத்த மயமாக்கல் பகுதியாக மாற்றப்பட்டு வருவதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், கன்னியா வெந்நீரூற்று தொல்பொருள் தளத்தை, அநுராதபுர காலத்தைச் சேர்ந்த பௌத்த இடிபாடுகளைக் கொண்ட தனித்துவமான இடமாக அடையாளம் காண முடியும் என தொல்பொருள் திணைக்கள ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டு முதல் கன்னியா வெந்நீரூற்று, தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதோடு, 2011 ஒக்டோபர் 9ஆம் திகதியிடப்பட்ட அரச வர்த்தமானி பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது. நீண்ட காலமாக திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச சபை, திருகோணமலை மாவட்ட செயலகம் என்பன கன்னியா வெந்நீரூற்றின் வருமான முகாமைத்துவம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு வந்தது. இந்நிலையில், தொல்பொருள் திணைக்களம் தலையிட்டு கன்னியா வெந்நீரூற்றின் மூலமாக கிடைக்கும் வருமானத்தை, திணைக்களத்தின் கணக்கின் ஊடாக அரச வருமானத்துடன் சேர்க்கும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

கடந்த 1ஆம் திகதி தொடக்கம் திருகோணமலை பிரதேச தொல்பொருள் திணைக்களம் வருமான முகாமைத்துவம் மற்றும் பராமரிப்புப் பணிகளை ஆரம்பிக்கவுள்ளதாக தொல்பொருள் திணைக்களத்தின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அனுர மனதுங்க உள்ளிட்ட அதிகாரிகளின் தலைமையில் இடம்பெற்றுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தொழில் வழிகாட்டல் மாநாடு



**(மாளிகைக்காடு செய்தியாளர்)**

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு அடுத்து எவ்வாறான உயர்கல்வி வாய்ப்புகள் காணப்படுகின்றன என்பது தொடர்பில் விளக்கமளிக்கும் வழிகாட்டல் மாநாடு கல்முனையன்ஸ் போரமினால் ஞாயிற்றுக்கிழமை (12) கல்முனை ஆஷாத் ப்ளாசா வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

உயர்தரப் பரீட்சை முடிவுகளின்படி, அரச பல்கலைக்கழகங்கள், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரிகள், இராணுவப் பல்கலைக்கழகம் மற்றும் இதர அரசசார் கல்வி நிறுவனங்களில் இலகுவழியில் கல்வி மற்றும் தொழில் தகைமைகளை பெறும் வழிகளையும், குறித்த துறைகளில் துறைசார் வல்லுனர்களாக மிளிர்வதற்கான வழிகளும் அனுபவமிக்க அத்துறைசார் வளவாளர்களைக்கொண்டு விளக்கமளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பொத்துவில் தொடக்கம் களுவாஞ்சிக்குடி ஆகிய ஊர்களிலிருந்தும் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

## போடியார் புலம்பல்!



***உள்ளூராட்சிசப தேர்தல முறையா அறிவிச்சுத்தான் இனி நடத்தப்போறதாக ஜனாதிபதி நரில் சொல்லியிருக்காரு எலுவா..? அப்ப முறையா எண்டா பலகாரம் கொழுக்கட்டை பெட்டியோட போய் மாப்பிள கேட்டு கலியாணம் முடிக்கிறமாதிரியோ? ஏற்கனவே முறையில்லாம மாப்புள கூட்டுனதுதான் தேர்தல் ஆணைக்குழு உட்ட பிழை யாக்கும். சரி, இனியாச்சும் வெத்தில பாக்கு வைச்சு பெட்டிய மாத்தி நல்லநாளப்பாத்து வாற வருஷம் நடத்தறதுதான் அம்மாச்சிட திட்டம் போல!***

## மட்டக்களப்பில் இரத்ததான முகாம்



**(கல்லடி செய்தியாளர்)**

மட்டக்களப்பு மறை மாவட்ட தவக்கால முயற்சி இருதயபுரம் திருஇருதயநாதர் ஆலய கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினரும், மட்டக்களப்பு மறைக் கோட்ட கத்தோலிக்க இளைஞர் சம்மேளனமும் இணைந்து நடத்திய இரத்ததான முகாம் ஞாயிற்றுக்கிழமை (12) திருஇருதயநாதர் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மறை மாவட்ட குரு முதல்வரும், இருதயபுரம் திருஇருதயநாதர் ஆலய பங்குத் தந்தையுமான அருட்பணி அலெக்ஸ் றொபட் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய இயக்குனர் அருட்பணி டெரன்ஸ் றாகல் அடிகளார் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்ற இவ் வைத்திய முகாமில், திருமதி கீர்த்திகா மதனழகன், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கி ஊழியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டு குருதிச் சேகரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது இருதயபுரம் கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய உறுப்பினர்கள், மட்டக்களப்பு மறைக் கோட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய உறுப்பினர்கள் மற்றும் இருதயபுரம் பங்கு மக்கள் ஆகியோர் கலந்து கொண்டு குருதிக்கொடை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்இரத்ததான முகாம் கடந்த 10 வருட காலமாக இவ் அமைப்பினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

**(கோணாவத்தை செய்தியாளர்)**

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மையவாடி, நகர்பிரிவில் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப் பட்ட இரகசியத் தகவலின்படி, பொலிஸ் பரிசோதகர் வசந்த குமார, பொலிஸ் சார்ஜன்ட் தாஹீர் ஆகியோர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்திற்கு சென்று நபர் ஒருவரை கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்து 1000 மில்லி கிராம் கேரள கஞ்சாவையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை அக்கரைப் பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் எம்.எச். எம்.ஹம்ஸா முன்னிலையில் நேற்று புதன் கிழமை(15) ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

உலக செய்திகள்

# தன்னை பற்றி கூகுளில் தேடிய அதிகாரிக்கு மரணதண்டனை விதித்த வடகொரிய ஜனாதிபதி



வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் குறித்து, இணையதளத்தில் தகவல் தேடிய உளவுத்துறை அதிகாரிக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வடகொரிய ஜனாதிபதியான கிம் ஜோங்–2இன் மறைவுக்குப் பின்னர் அவரின் மகனான கிம் ஜோங் உன், கடந்த 2011ஆம் ஆண்டு புதிய ஜனாதிபதியாக பொறுப்பேற்றார். தந்தையைபோன்றே இவரும் கம்யூனிச அரசை நிர்வகித்து வருகிறார். அதனால் தன்னை எதிர்ப்பவர்களையும், அரசுக்கெதிராக சதி செய்பவர்களையும் தண்டிக்கும் வகையில் மரணதண்டனை விதித்து வருகிறார்.

இந்நிலையில், 'பியூரோ 10' என்றழைக்கப்படும், அந்த நாட்டின் உளவு அமைப்பைச் சேர்ந்த அதிகாரியொருவர், கூகுளில் ஜனாதிபதி கிம் குறித்த தகவல்களை விவரமாகத் தேடியுள்ளார்.

இதனை எப்படியோ அறிந்துகொண்ட கிம், அவருக்கு மரணதண்டனை விதித்து உத்தரவிட்டுள்ளார். துப்பாக்கியால் சுடும் படைப் பிரிவினரால் அவருடைய மரணதண்டனையை நிறைவேற்ற உத்தரவிடப்பட்டுள்ளது. இது, அங்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் மரணதண்டனைக்கு எதிராகக் குரல் எழுந்துவரும் நிலையில், வடகொரிய ஜனாதிபதி மரணதண்டனை விதிப்பது அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

# மலாவியை புரட்டிப்போட்ட 'ப்ரெடி' புயல்; 220 பேர் பலி



கிழக்கு ஆபிரிக்க நாடான மலாவியை தாக்கிய 'ப்ரெடி' புயலால் 220இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதுடன், 584 பேர் காயமடைந்துள்ளனர். 37 பேர் காணாமல்போயுள்ள நிலையில் தெளிவற்ற வானிலையால் மீட்புப் பணிகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தென்கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள ப்ரெடி புயல், ஒரே மாதத்தில் 2ஆவது முறையாக மொஸாம்பிக் அருகே கரையைக் கடந்தது. இதனால், அங்கு சூறைக்காற்றுடன் கனமழை பெய்தது. அண்டைநாடான மாலாவியையும் இந்தப் புயல் கடுமையாகத் தாக்கியது.

பல்வேறு பகுதிகளில் மண்சரிவுகள் ஏற்பட்டு வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன. மழை, வெள்ளம் மற்றும் மண்சரிவில் சிக்கி 220இற்கும் அதிகமானோர் உயிரிழந்த நிலையில், பிணவறைகளில் உறவினர் உடல்களை அடையாளம் காண, மழையிலும் நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்தனர்.

# கலவரபூமியானது பாகிஸ்தான்



## இம்ரான் கானின் கைது நடவடிக்கையில் திணறும் பொலிஸ்; களமிறங்கியது இராணுவம்

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானை கைது செய்ய முடியாமல் நேற்று (15) இரண்டாவது நாளாகவும் பொலிஸார் திணறிய நிலையில், கைது நடவடிக்கைக்காக அந்நாட்டு இராணுவம் களமிறங்கியுள்ளது.

பாகிஸ்தானில் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் தெஹ்ரிக்-இ-இன்சாப் கட்சியின் சார்பில் நடந்த பேரணியில் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் கலந்துகொண்டார். அப்போது பேசிய இம்ரான், கூடுதல் மாவட்ட மற்றும் செசன்ஸ் நீதிபதி ஜீபா சௌத்ரி மற்றும் பொலிஸ் உயரதிகாரிகள் தனது கட்சிக்கு எதிரான பாரபட்சமான நடவடிக்கைக்காக மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று மிரட்டல் விடுக்கும் வகையில் தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பில் வழக்கு தொடரப்பட்டிருந்த நிலையில் இவ்வழக்கை விசாரித்த இஸ்லாமாபாத்திலுள்ள மாவட்ட மற்றும் செஷன்ஸ் நீதிமன்றம், இம்ரான் கானுக்கு பிணையில் வெளியே வரமுடியாத பிடியாணையை பிறப்பித்துள்ளது.

நீதிமன்ற உத்தரவையடுத்து இம்ரான் கானை கைதுசெய்ய ஹெலிகொப்டர் மூலம் இஸ்லாமாபாத் பொலிஸார் லாகூருக்கு விரைந்தனர்.

இந்நிலையில், இம்ரான் கானை பொலிஸார் கைது செய்யவுள்ள தகவலை தொடர்ந்து அவரது வீடு அமைந்துள்ள ஜமான் பூங்கா முழுவதும் நேற்றுமுன்தினம் காலைமுதல் அவரது ஆதரவாளர்கள் குவியத் தொடங்கினர்.

ஊழல் வழக்கில் சிக்கியுள்ள இம்ரான் கானை கைதுசெய்யும் நடவடிக்கையில் நூற்றுக்கணக்கான பொலிஸார் களமிறங்கிய நிலையில், அவர்களை இம்ரான் வீடு அருகே நெருங்கவிடாமல் அவரது ஆதரவாளர்கள் பெரும் வன்முறையில் இறங்கியுள்ளனர். இதனால் அங்கு பதற்றம் நிலவுகிறது.

வன்முறையின்போது பொலிஸ் வாகனங்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளதுடன், கடைகள், வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. இஸ்லாமாபாத், கராச்சி, பெஷாவர் உட்பட பல முக்கிய நகரங்களில் போராட்டங்கள் வெடித்ததால் கலவரச் சூழல் காணப்பட்டது.

பொலிஸார் தடியடி நடத்தியும் கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசியும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கலைத்தனர். இம்ரான் கானின் வீட்டின் முன்பு நூற்றுக்கணக்கில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இம்ரான் கான் அதிகாரிகளுக்கு ஒத்துழைக்க மறுப்பதால் அவர் வீட்டுக்குச் செல்லும் வீதி உட்பட அனைத்து வீதிகளும் அடைக்கப்பட்டுள்ளன.



**"எனக்காக போராடுங்கள்"**

இதனிடையே, தான் கைதுசெய்யப்பட்டாலோ அல்லது கொலை செய்யப்பட்டாலோ, பாகிஸ்தான் மக்கள் பின்வாங்காமல் தொடர்ந்து போராட வேண்டுமென இம்ரான் கான் அழைப்பு விடுத்துள்ளார்.

பிரதமராக பதவி வகித்தபோது பெற்ற பரிசுப் பொருட்களை, கோடிக்கணக்கான ரூபாவுக்கு சட்டவிரோதமாக விற்ற குற்றச்சாட்டில் இம்ரான் கானை கைதுசெய்து, சனிக்கிழமைக்குள் ஆஜர்படுத்துமாறு இஸ்லாமாபாத் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

லாகூரிலுள்ள இம்ரான் கான் இல்லத்தில் திரண்ட ஆதரவாளர்கள் கைதுசெய்யவந்த பொலிஸார் மீது கற்களை வீசி தாக்கினர். பொலிஸாரும் பதிலுக்கு நீர்தாரைப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

தான் எப்போது வேண்டுமானாலும் கைதுசெய்யப்படலாம் என வீட்டிலிருந்தபடியே வீடியோ வெளியிட்ட இம்ரான் கான், மக்கள் உரிமைகளுக்காக வீதியில் இறங்கி போராடுமாறு அறைகூவல் விடுத்துள்ளார்.

# அமெரிக்க ட்ரோன் மீது ரஷ்யப் போர் விமானம் தாக்குதல்!




அமெரிக்காவின் ட்ரோன் மீது ரஷ்யப் போர் விமானங்கள் தாக்குதல் நடத்திய சம்பவம் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச கடல் எல்லையில் அமெரிக்காவின் எம்.க்யூ-9 வகை அதிநவீன ட்ரோன் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது ரஷ்யாவின் சுகோய்-27 போர் விமானங்கள் இடைமறித்து ட்ரோன் மீது பலமாக மோதி அழித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதனை உறுதிசெய்துள்ள அமெரிக்கா, ரஷ்யாவின் செயலுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

# ஆழ்துளைக்கிணற்றில் வீழ்ந்த சிறுவன் உயிரிழப்பு

மத்தியபிரதேச மாநிலம் விதிஷாவில், 60 அடி ஆழ ஆழ்துளைக்கிணற்றில் வீழ்ந்த 7 வயதுச் சிறுவன், 24 மணிநேரப் போராட்டத்திற்கு பின் சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

குறித்த சிறுவன் விளையாடிக் கொண்டிருந்தபோது நேற்றுமுன்தினம் காலை சுமார் 11 மணியளவில், விவசாய நிலத்தில் திறந்த நிலையில் இருந்த ஆழ்துளைக்கிணற்றில், சுமார் 43 அடி ஆழத்தில் சிக்கிய லோகேஷை, தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப்படையினர் மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

சிறுவனுக்கு ஒட்சிசன் வழங்கப்பட்டு, பொக்லைன் இயந்திர உதவியுடன் கிணற்றின் அருகில் பள்ளம் தோண்டி அவனை மீட்க முயற்சித்தனர். எனினும், இம்முயற்சிகள் யாவும் தோல்வியுற்றன. லோகேஷ் உயிரிழந்த நிலையிலேயே மீட்கப்பட்டுள்ளான்.

# உலக சம்பியனை வெள்ளையடிப்புச் செய்து வரலாறு படைத்த பங்களாதேஷ்




நடப்பு இருபதுக்கு 20 உலக சம்பியனான இங்கிலாந்து அணியை இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் 3-0 என்ற அடிப்படையில் வெள்ளையடிப்பு செய்து பங்களாதேஷ் அணி புது வரலாறு படைத்துள்ளது. முன்னதாக நடைபெற்ற முதலிரு ரி20 போட்டிகளையும் வெற்றிகொண்ட பங்களாதேஷ் அணி இங்கிலாந்து அணியுடன் முதல் முறையாக ரி20 சர்வதேச தொடரைக் கைப்பற்றி சாதனை படைத்திருந்தது.

இந்நிலையில், இரு அணிகளுக்குமிடையிலான 3ஆவது ஆட்டம் நேற்று முன்தினம் ஷேரே பங்களா நெஷனல் மைதானத்தில் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி பந்துவீச்சை தெரிவுசெய்தது, இதையடுத்து முதல் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 20 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 158 ஓட்டங்கள் குவித்தது.

159 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணி சீரான ஆட்டத்தை வெளிப்படுத்தியது, முன்கள ஆட்டக்காரர்களான டேவிட் மாலன் 53 ஓட்டங்களும், ஜோஸ் பட்லர் 40 ஓட்டங்களும் குவித்தனர். இருப்பினும் அடுத்தடுத்து களமிறங்கிய வீரர்கள் ஓட்டங்களை குவிக்க தவறியதால், இங்கிலாந்து அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 142 ஓட்டங்கள் மட்டுமே குவித்தது. இதன் மூலம் 16 ஓட்டங்களால் பங்களாதேஷ் அணி வெற்றிபெற்றது.

முன்னதாக சொந்த மண்ணில் இங்கிலாந்து அணியிடம் ஒருநாள் தொடரை 1-2 என்ற அடிப்படையில் நழுவவிட்ட பங்களாதேஷ் அணி, ரி20 தொடரில் தக்க பதிலடி வழங்கியுள்ளது.

# நசீர் மாஸ்டர் ஞாபகார்த்த உதைபந்தாட்டப் போட்டியில் எம்.வை. யுனைட்டட் கழகம் சம்பியன்



(அஷ்ரப் ஏ சமத்)

மாபோல யூத் கழகத்தின் ஏற்பாட்டில் நசீர் மாஸ்டர் ஞாபகார்த்த உள்ளூர் உதைபந்தாட்டப் போட்டி வத்தளை மாபோல நகர சபை உப தலைவர் அல்ஹாஜ் தாஹிர் ரிஷானின் அனுசரணையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாபோல அல்-அஷ்ரப் பாடசாலையின் மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் எம்.வை. யுனைட்டட் கழகம் சம்பியன் வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றியது. இரண்டாம் இடத்தினை அகுன மடாடா பெற்றது. இவ்வணிகளுக்கான வெற்றிக்கிண்ணம் வத்தளை மாபோல நகர சபையின் உபதலைவரால் வழங்கப்பட்டது.



# பரிஸ் 24 ஒலிம்பிக் தொடர் ஓட்டம் ஆரம்பம்



(ரமணி)

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் 2024ஆம் ஆண்டு நடைபெறும் ஒலிம்பிக்கின் முன்னோடி திட்டமான உலகளாவிய தொடர் ஓட்டம் நடத்தப்படுகிறது. ஒலிம்பிக் நடைபெறுவதற்கு 500 நாட்கள் இருக்கும் நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை தொடர் ஓட்டம் ஆரம்பமானது. பிரெஞ்சு தூதரகங்கள் மற்றும் பிரெஞ்சு வெளிநாட்டுப் பிராந்தியங்களிலுள்ள அதிகாரிகளின் உதவியுடன் தொடர் ஓட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

24 மணிநேர தொடர் ஓட்டம் நியூசிலாந்தில் பியூ வெலிங்டனிலுள்ள நீர்முனையில் பிரெஞ்சு தூதர் லோரன்ஸ் அதிகாலையில் ஆரம்பித்துவைத்தார்.

பீஜியில், பிரான்ஸ் தூதரக ஊழியர்களால் பாடசாலைகளுக்கான பந்தயம் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஒவ்வொரு நாட்டின் விளையாட்டு மற்றும் விளையாட்டு வீரர்கள், அவர்களின் திறமை மற்றும் செயல்திறன் ஆகியவற்றிற்கு நாங்கள் மதிப்புக் கொடுக்கிறோம், செலுத்துகிறோம் என்று பிரான்ஸ் தூதர் பிரான்சுவா-சேவியர் லெகர் கூறினார்.

1924இல், விளையாட்டுப் போட்டிகள் கடைசியாக பரிஸில் நடைபெற்றபோது, தடகளத்தில் நூர்மி ஐந்து தங்கப் பதக்கங்களை வென்றார். தொடர் ஓட்டம் முடிவதற்குள், 116 நாடுகளில் சுமார் 20,000 பேர் பங்கேற்பார்கள் என்று ஏற்பாட்டாளர்கள் கூறியுள்ளனர்.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# முதல் ஆட்டத்தில் இலங்கைக்குத் தோல்வி




2023ஆம் ஆண்டுக்கான பங்கபந்து கிண்ண சர்வதேச கபடி தொடரில் இலங்கை பங்கேற்ற முதல் ஆட்டம் நேற்றுமுன் தினம் தாய்லாந்துக்கு எதிராக நடைபெற்றது. இதில் இலங்கை அணி 36-32 என தோல்வியைத் தழுவியது. ஆட்டம் தொடங்கியதிலிருந்தே தாய்லாந்து அணி வேகமாக விளையாடி முன்னேறியது.

அதன்படி, நிர்ணயிக்கப்பட்ட நேர முடிவில் தாய்லாந்து அணி 36-32 என்ற புள்ளிக்கணக்கில் 4 புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. ஆட்டத்தின் சிறந்த வீரராக தாய்லாந்தின் ஷாய் சிங் தெரிவுசெய்யப்பட்டார்.

# வவுனியா அல்-இக்பால் மகா வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டியில் ஹிலால் இல்லம் சம்பியன்



(சிவகுமார் திவியா)

வவுனியா, சூடுவெந்தபுலவு பகுதியில் அமைந்துள்ள அல்-இக்பால் மகா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் முதல்வர் ஏ.கே.உபைத் தலைமையில் நடைபெற்றது.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் நீண்ட காலத்துக்குப் பின்னர் மஞ்சள் நிறத்தையுடைய ஹிலால் இல்லம் முதலாம் இடத்தையும், நீல நிறத்தையுடைய தாரீக் இல்லம் இரண்டாம் இடத்தையும், சிவப்பு நிறத்தையுடைய சிராஜ் இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

இல்லங்களுக்கான வெற்றிக் கேடயங்களை பிரதம அதிதியாக கலந்துகொண்ட மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத் சந்திர மற்றும் விருந்தினர்கள் இணைந்து வழங்கினர். இந்நிகழ்வில் மாவட்ட அரச அதிபர், உலுக்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர், வலய மட்ட பிரதிநிதிகள், அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7